பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 | ஐப்பசி 15 | ஜுல்-கஜ் 21 | இதழ் 262
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 31-10-80

SRI LANKA ... RECEIVED 30-10-80 PERIODICALS DIVISION

ஈரான்—ஈராக் யுத்தம்:

## இரு நாடுகளும் தாமே முன்னேறுகின்றனவாம்!

...டன், அக் 30 ...றனை மீ தங்களாக ...த்துவரும் ஈரான்-ஈராக் ...லை பல முனைகளிலும் ...கள் முன்னேறி ... ஈரான் அறிவித் ... அதே வேளையில் ஈரான் கூற்று ஆதாரமற்றவை என்றும் தமது படைகளே பல முனைகளிலும் முன்னேறி தாகவும் ஈராக் தெரிவித்துள்ளது.

### 2 ஈராக் விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன

ஈரானுக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய ஈராக் போர் விமானங்கள் இரண்டை தமது படைகள் சுட்டுவிழுத்தியதாக ஈரான் அறிவித்ததை ஈராக் இராணுவ பீடமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

இது இவ்வாறிருக்க பல ஈராக் நிலைகளை தமது போர் விமானங்கள் குண்டுவீசித் தாக்கியதாகவும் தெரிவித்த ஈரான், இத்தாக்குதலின்போது போர்முனைக்கு ஆயுதங்களை ஏற்றிச் சென்ற இரண்டு டாங்கிகளும் இரண்டு கண்ணை வண்டிகளும் சேதப்படுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தது.

### மிக் விமானங்கள் விரட்டப்பட்டன

துறைமுக நகர் ஒன்றை இன்று காலை தாக்க முயன்ற ஈராக 'மிக்' விமானங்களை

(8-ம் பக்கம் பார்க்க)

# இறக்குமதி மாவின் விலை 82 சதத்தால் குறைப்பு!

## பாண் விலையில் மாற்றமில்லை

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மாவின் விலையை மட்டும் குறைப்பதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போது கிலோ ஒன்று (2.2 ருத்தல்) ரூபா 5.22 ஆக விற்கப்படும் மா எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ரூபா 4.40 ஆக விற்கப்படும். இவ்விலைக் குறைப்பு மூன்று மாதங்களுக்கு மட்டுமே அமுலிலிருக்கும்.

அரச மாஆலைக் கூட்டுத்தாபனம், திருமலை பிறிமா மாஆலை என்பவற்றிலிருந்து பெறப்படும் மா பழைய விலைக்கே விற்கப்படும். இவ்வாறு மாவை இரு விலைகளில் விற்பதால் பாணின் விலையை குறைப்பதில்லை என்று உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எச். பி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் மாவின் விலையைக் குறைத்து விற்பதால் மூன்று மாதத்தில் அரசுக்கு 10 கோடி ரூபா நஷ்டம் ஏற்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. (கு)

## கிருஷ்ணமூர்த்தி இலங்கை வருகிறார்

(கொழும்பு)

பிரபல மெய்ஞ்ஞானி திரு. ஜே. கிருஷ்ணமூர்த்தி நவம்பர் மாத முற்பகுதியில் அரசாங்க விருந்தினராக இலங்கைக்கு விஜயம் செய்கிறார்.

அடுத்தமாதம் 4ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யும் இவர் 18ம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார்.

கடந்த 50 ஆண்டுகளாக உலகின் பலபகுதிகளுக்கும் விஜயம்செய்து பொதுக்கூட்டங்களிலும், கலந்துரையாடல்களிலும் கலந்துகொண்டு இவர் உரையாற்றிவருகின்றார். இவருடைய பேச்சுகளும் எழுத்துக்களும், கலந்துரையாடல்களும் ஆங்கில மொழியில் எழுதப்பட்டுள்ளன.

கடைசியாக 1957ம் ஆண்டு இவர் இலங்கைக்கு விஜயம் செய்தபோது நிகழ்த்திய சொற்பொழிவுகள் சிங்கள மொழியில் நூலாக வெளிவந்தது.

ஆந்திராமாநிலத்தில் 1895ம் ஆண்டு பிறந்த இவர் பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவராவர். இவர் 1911ம் ஆண்டில் இங்கிலாந்தில் கல்விகற்கும் பொருட்டு அன்னிபெசன்ட் அம்மையாருடன் சென்றிருந்தார். இவர் கூடவே இவரது சகோதரர் நித்தியானந்

(8-ம் பக்கம் பார்க்க)


## வாலிபரே திரண்டு வருக!

கிறிஸ்துவுக்காக இளைஞர் சங்கம் அளிக்கும்
நகைச்சுவை நாடகம், இன்னிசை நிகழ்ச்சி
நிறைந்த

### "அன்பின் தொனி"

வாலிப நிகழ்ச்சி

விசேஷ பேச்சாளன்:
பாரத வாலிபர் விரும்பிக் கேட்கும்

### திரு. விக்டர் மனோகரம்

இடம்:
வீரசிங்கம் மண்டபம்

ஒக்டோபர் 31-10-80 — நவம்பர் 1-11-80
தினசரி மாலை 5-00 மணி

இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

பிரவேசம்: இலவசம்!
இலவசம்!! இலவசம்!!

7156


சார்ஜன் அன்ரன் கொலைவழக்கு:

## "சார்ஜன் சுடப்பட்டசெய்தி தொலைபேசிமூலம் வந்தது"

### ஏ. எஸ். பி. சுரம்பதி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"சார்ஜன் ஒருவர் காங்கேசன்துறை வீதியில் சுடப்பட்டிருப்பதாகவும், சந்தேக நபர்கள் சுன்னாகம் பக்கமாக போய்விட்டதாகவும், எனக்குத் தொலைபேசிமூலம் யாழ் பொலிஸ் நிலையத்திலிருந்து தகவல் வந்தது."

சார்ஜன் அன்ரன் கொலை வழக்கில் நேற்று சாட்சியமளித்த உதவி பொலிஸ் அதிபர் பி. எம். என். சுரம்பதி மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ் நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 2-8-80 ல் யாழ்ப்பாணத்தில் பொலிஸ் சார்ஜன் அன்ரனை சுட்டுக் கொலை செய்ததாகவும், டாக்டர் சோமசுந்தரத்தைக்கொலை செய்ய முயற்சித்ததாகவும், இராணுவ சிப்பாய்களான ஹெட்டியாராய்ச்சி, உப்புல் ஆரியரத்ன குற்றம்சாட்டப்பட்டுள்ளனர்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் ஆஜரானார். பொலிஸ் தரப்பில் உதவி பொலிஸ் அதிபர் ஜனப் நிசாம் ஆஜரானார். இறந்தவர் சார்பு நலனை அவதானிக்க சட்டத்தரணி எஸ் லோகேஸ்வரன் ஆஜரானார்.

உதவி பொலிஸ் அதிபர்

(8-ம் பக்கம் பார்க்க)


## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ரௌத்திரி வருஷம் ஐப்பசி மாதம் 16-ம் திகதி (1-11-80) சனிக்கிழமை இரவு 9 மணி முதல் 11 மணிவரை வரும் சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது புதல்வன்<br>திருநிறை செல்வன்<br>இராஜகுலசிங்கம்<br>(உரிமையாளர், ஸ்ராண்லி பேணிச்சர் பலஸ்)<br>அவர்களுக்கும் | எமது புத்திரி<br>திருநிறை செல்வி<br>சுசிலா<br>அவர்களுக்கும் |

நல்லூர் ஆதீன மண்டபத்தில் திருமணம் நிகழவிருப்பதால் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அழைக்கின்றோம்.

★ வரவேற்பு உபசாரம் 2-11-80 ஞாயிறு மாலை 4 மணியளவில் மணமகனில்லத்தில் நடைபெறும்.
★ தனிப்பட்ட அழைப்புகள் அனுப்ப முடியவில்லை. இதனையே அன்பழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திரு. நடராசாவும் பாரியாரும்.<br>(உரிமையாளர் ரதி வாச் வேக்ஸ்)<br>இல 6, பிறவுண் வீதி,<br>யாழ்ப்பாணம். | திரு. தங்கராசாவும் பாரியாரும்<br>(உரிமையாளர் நியூ ராஜா ஸ்டோர்ஸ்)<br>இல 7, முஸ்லீம் கல்லூரி வீதி,<br>யாழ்ப்பாணம். |

7221



## GRAND SALE... சகாய விற்பனை

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு
பாட்டா பாதணிகளுக்கு,
மலிவு விற்பனை, முந்துங்கள்.

எஸ். சின்னத்துரை அன் பிறதர்ஸ்
இல 39, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம். Phone: 284


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பதிவு செய்யப்படாத டெலிகா வான், சீர்திருத்திய (F)போட் வான் விற்பனைக்கு உண்டு. ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 7603, 7699. (7194)

கோழிக்குஞ்சுகள் (விருத்துப் பருவம்) விற்பனைக்குண்டு. ... கம்பனி, 586, கண்டி ரோட், நெடுங்குளம் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம். 7195

சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோவில் வடக்கு வீதிக்கு அருகாமையில் ... பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இரு பக்கமும் பாதை. கிணறு வசதிகளுண்டு, வீடு கட்ட, தொழிற்சாலை அமைக்க ஏற்ற இடம். விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். த. கமலேஸ்வரன், பெருந்தெருக்கள் திணைக்களம், புகையிரத நிலைய வீதி, வவுனியா. எஸ். தங்கராசா, பலாலி விமான நிலையம், வசாவிளான். 7202

யாழ்ப்பாணம் - கல்வியங்காட்டில் பன்னிரண்டு பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. இரண்டு, மூன்று பரப்புத் துண்டுகளாகவும் வாங்கலாம். விபரங்களுக்கு; 92, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 216

## தேவை

காரியாலயப் பணியாளர் தேவை. தராதரம் குறைந்தது எட்டாம் வகுப்புச் சித்தியெய்தியவராயும், 20 வயதிற்கு மேற்பட்டவராயும், நற்குணமுடையவராயுமிருத்தல்வேண்டும். அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் 10-11-1980க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்: 7204, C/o, ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 7204

லொறி லைசென்சுடன் அனுபவமுள்ள இரண்டு சாரதி உடனே தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் பிற்பகல் நாலு மணிக்குப் பின் உடன் வந்து சந்திக்கவும். ஜெயசீலன், கோண்டாவில் இருபாலை ரோட், கோண்டாவில். 72[illegible]


# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 15-ம் திகதி (வெள்ளிக்கிழமை) (31-10-1980)

**மேடம்:** பலகாலம் எதிர்பார்த்திருந்த பதவி உயர்வுக்கு வழிகோலப்படும், சிலருக்குப் புதிதாகவும் தொழில் கிடைக்கக் கூடும், வருவாயும் உயரும்.

**இடபம்:** எதிர்பாராத பொருள் லாபத்திற்கும் இடமுண்டு, பிள்ளைகளால் பிறந்தகத்தில் பெருமை சேரும், சகோதரவழியால் நன்மையும் உண்டு.

**மிதுனம்;** ஏமாற்றத்தின் தாக்குதல் உங்களுக்குச் சோர்வைத்தரலாம், தொழிலால் நஷ்டமடைய வேண்டிய நிலை ஏற்படும், குடும்பத்தில் தொல்லைகள் அதிகரிக்கும்.

**கடகம்:** உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள், குடும்பத்தில் அமைதி குன்றும், நன்றாக ஆலோசித்த பின்பே எந்த நடவடிக்கையையும் எடுக்கவும்.

**சிங்கம்:** இல்லம் இன்று கட்டிவெல்லம்போல் இனிக்கும், இன்சொல்லின் மூலம் மற்றவர்களைக் கவர்வீர்கள், பொருள் துறையிலும் நல்ல முன்னேற்றம் காணப்படும்.

**கன்னி:** வாழ்க்கை இருள் மண்டியதாகக் கிடக்கும், ஏமாற்றத்தின் தாக்குதல் மனதிற்கு வேதனையைத்தரும், குடும்பத்தில் ஒருவரின் உடல் நலன் பாதிக்கப்படலாம்.

**துலாம்:** அன்னைவழிஆதரவு தாராளமாகக் கிடைக்கும், அறிஞர்களின் தொடர்புகளும் ஏற்படும், பொருள்வரவிற்கும் இடமுண்டு.

**விருச்சிகம்:** வாழ்க்கை இன்று அமைதியாகச் செல்லும்; எண்ணம்போல் யாவும் நடக்கும், உறவினர் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

**தனுசு:** ஆயுத பயத்திற்கும் அவசரக் கவலைக்கும் இடமுண்டு, கைகலப்புகளைத் தவிர்த்துக்கொள்ளவும், எதிரிகள் விஷயத்தில் அதிக விழிப்புடன் இருக்கவும்.

**மகரம்:** எண்ணிய கருமம் கண்ணியமாய் முடியும். களஸ்திரவழியால் பொருள் வரவுக்கும் இடமுண்டு, பெரியோர் மதிப்பும் உண்டு.

**கும்பம்:** நண்பர்களின் நச்சரிப்பு மனக்குழைச்சலை ஏற்படுத்தும், கடமையாற்றும் இடத்தில் மேலதிகாரியின் கண்டிப்புக்கு இலக்காவீர்கள்.

**மீனம்:** புதிய வழிகளின் மூலம் பொருள்வந்து சேரும், பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும், தந்தைவழியால் தனலாபமும் வந்துசேரும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
உத்தரவுப் பத்திரமின்றி
## அரிந்த மரம் விற்பனைக்கு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின்
புளியங்குளம் மரக்காலையில்
பின்வரும் அளவுகளைக் கொண்ட அரிந்த மரங்கள்
உத்தரவுப்பத்திரமின்றி விற்பனை செய்யப்படும்
**I-ம், II-ம், III-ம் வகுப்புகள்**
4 அடி தொடக்கம் 6 அடி நீளம் கொண்ட
பல்வேறு அளவுகள்
மேலதிக விபரங்களை எனது கந்தோரில் அல்லது
புளியங்குளம் அரசாங்க மரக் கூட்டுத்தாபன
பொறுப்பதிகாரியிடம்
இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரதேச முகாமையாளர் (வ. பி)
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்,
25, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
7[illegible]


ரியூட்டரி மாணவி கொலைவழக்கு:

# "1-ம் எதிரியை கைதுசெய்தபோது அவரிடம் ஆயுதம் ஒன்றுமில்லை"

## சார்ஜன்ட் சண்முகசாமி சாட்சியம்

(புலோலி நிருபர்)

"புளியம்பொக்கணையில் வைத்து 1ம் எதிரியைக் கைது செய்தபோது எதிரியின் கையிலோ, உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டரின் கையிலோ எதுவித ஆயுதமும் இருந்ததை நான் காணவில்லை",

இவ்வாறு பொலிகண்டி டியூட்டரி மாணவி கமலம் இராமச்சந்திரன் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த பாணந்துறை பொலிஸ் சார்ஜன்ட் திரு. சு. சண்முகசாமி குறிப்பிட்டார்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் மீண்டும் விசாரணைசெய்யப்பட்டு வருகின்றது.

தொடர்ந்துசாட்சியமளித்த சார்ஜன்ட் சண்முகசாமி கூறியதாவது; நான் 4-3-80 அன்று பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் தற்காலிகமாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அதற்கு முன்பு நிரந்தரமாகப் பாணந்துறை பொலிஸில் கடமையாற்றினேன். 4-3-80 அன்று பி. ப. 1 மணியளவில் நான் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதியுடன் புளியம்பொக்கணைக்குப் போகப் புறப்பட்டேன். எங்களுடன் இன்னும் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் கூடவந்தார்கள். மனோகரனும் எங்களுடன் கூடவந்தார். அங்கு ஜீப் வண்டியில்தான் சென்றோம்.

பி. ப. 3மணிபோல் புளியம் பொக்கணையை அடைந்த நாங்கள் குறிப்பிடப்பட்ட எதிரியின் வீட்டிற்குச் சற்றுத் தூரத்தில் ஜீப்பை நிறுத்தி விட்டு ஜீப்பால் இறங்கி எதிரியின் வீட்டை நோக்கி நடந்து சென்றோம். அப்போது மனோகரன் ஜீப்பிலேயே இருந்தார்.

எதிரியின் வீட்டையடைந்ததும் சப்இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதியும் இருபொலிஸ் கான்ஸ்டபிள்களும் வீட்டின் முன்புறமாகச் செல்ல நான் வீட்டின் பின்புறமாகச்சென்றேன். அங்கு 1ம்எதிரி கைது செய்யப்பட்டார்.

பின்பு 1ம் எதிரி, 1ம் எதிரியின் தற்போதைய மனைவி லோகேஸ்வரி, மனைவியின் சகோதரன் மகேந்திரன், தகப்பன் செல்லையா ஆகியோரையும் ஏற்றிக்கொண்டு கிளிநொச்சிப் பொலிசிற்குப் போனோம். அங்கு வைத்து லோகேஸ்வரி, மகேந்திரன், செல்லையா, மனோகரன் ஆகியோரின் வாக்குமூலத்தை எடுக்கும்படி நான் பணிக்கப்பட்டேன். எனவே நான் கிளிநொச்சிப்பொலிஸ்நிலையத்திலே நின்றேன்.

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதியும் இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் 1ம் எதிரியுடன் பருத்தித்துறைக்குச் சென்றுவிட்டார்கள். நான் கிளிநொச்சிப் பொலிசில் வைத்து பணிக்கப்பட்டபடி வாக்கு மூலங்களைப் பதிந்தேன், ச இன்ஸபெக்டர் புளியம்பொக்கணையில்வைத்து லோகேஸ்வரியிடமிருந்து ஒரு சோடி ஜிப்சியையும் மீட்டார்.

நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்ட 1 சோடி ஜிப்சியையும் சாட்சி அடையாளம் காட்டினார்.

நான் 14-3-80 அன்று பருத்தித்துறையில் உள்ள விடோ சலூன் உரிமையாளரான ஜெகன் மோகனின் வாக்குமூலத்தைப்பதிவு செய்தேன். அதே தினம் பற்றி மேரிஜயம்மா (5-ம் எதிரியின் தாய்) வின் வாக்குமூலத்தையும் பதிவு செய்தேன். 12-3-80-ல் சே. விவேகானந்தராசா என்பவரின் வாக்கு மூலத்தையும் பதிவு செய்தேன்.

1-ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்

**சட்;** நீங்கள் 4-3-80 அன்று 1-ம் எதிரியின் வீட்டிற்குச் சென்ற போது வீடு பூட்டப்பட்டிருந்ததா? அரைவாசி திறக்கப்பட்டிருந்தது.

சா: 1-ம் எதிரி உள்ளே படுத்திருந்தார்; நான் உள்ளே போகவில்லை. நான் வீட்டின் பின்புறமாகவர உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதி 1-ம் எதிரியைக் கையில் பிடித்துக் கொண்டிருந்தார். நான் உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டரைப் பிரிந்து வீட்டின் பின்புறமாகச் சென்று வீட்டின் முன்புறம்வர கிட்டத்தட்ட இரண்டு நிமிடங்கள் எடுத்திருக்கும்.

சட்: உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதி 1-ம் எதிரியைப்பிடித்து வைத்திருந்தபோது ஏதாவது ஆயுதம் கையில் இருந்ததா? இருவரது கையிலும் எதுவித ஆயுதமும் இருக்கவில்லை. ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களின் கையில் ஏதாவது ஆயுதம் இருந்ததா என்பதை நான் கவனிக்கவில்லை.

சட்: சப்இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதி 1-ம் எதிரியின் வாக்குமூலத்தை எடுத்தாரா? நான் புளியம்பொக்கணையிலும் கிளிநொச்சியிலும் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதியுடன் தான் நின்றேன் புளியம் பொக்கணையிலும் கிளிநொச்சியிலும் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் 1-ம் எதிரியின் வாக்குமூலத்தைப் பதியவில்லை.

2ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஸ்ரீநிவாயா சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்:- நீர் 14-3-80ல் விடோ சலூன் உரிமையாளரின் வாக்குமூலத்தை எடுப்பதற்கு ஏன் போனீர்? - உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதியின் பணிப்பின் பேரில்.

(மேல்விசாரணை நவம்பர் மாதம் 4ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# மாயமாக மறைந்த ரூ.25,000 பெறுமதி நகைகள்!

(மன்னார்)

25 ஆயிரம் ரூபா பெறுமதிமான மாலை, காதுச் சிமிக்கி, மோதிரம், சங்கிலி என்பன மாயமாக மறைந்து விட்டதாக மன்னார் பொலிசில் பெண்மணி ஒருவர் புகார் செய்துள்ளனர்.

பெரிய மடு குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த இளைய பெருமாள் மீனாட்சி என்ற பெண் மன்னார் பொலிசில் செய்துள்ள புகாரில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் தாம் நகைகளை அணிந்திருந்ததாகவும் பின்னர் அவற்றை வீட்டில் உள்ள அம்மிக் கல்லுக் கடியில் புதைத்து வைத்ததாகவும், பின்னர் விவசாயத் தேவைக்கு பணம் தேவைப்படவே நகைகளை அடைவு வைக்கவென எடுப்பதற்கு முயன்றபோது நகைகளைக் காணவில்லை என்றும் தெரிவித்துள்ளார்,

மன்னார் பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருட்டுப் பொருள்களை பொலிஸார் மீட்டனர்!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமிகோவில் திருவிழா காலத்தில் திருடப்பட்ட சுமார் 8000 ரூபா பெறுமதியான 7 ஒலிபெருக்கி யூனிட்டுகளை யாழ் பொலிசார் மீட்டுள்ளதுடன், சந்தேகநபர் இருவரையும் கைதுசெய்தனர்.

யாழ். நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் சந்தேகநபர்களான ஜெயரத்தினம், க. ராஜா ஆகியோரை, யாழ், பொலிஸ் கான்ஸ்டபிள் எஸ். குணரத்தினம ஆஜர்செய்தார்.

சந்தேகநபர்களான கோண்டாவிலைச் சேர்ந்த ஜெயரத்தினம், அரியாலையைச் சேர்ந்த கே. ராஜா ஆகியோர், திருட்டுக்குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

யாழ் பொலிஸ்நிலையத்தில் ஒலிபெருக்கி யூனிட் தொடர்பாக செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து சந்தேகநபரான ஜெயரத்தினத்தை விசாரணைக்குட்படுத்தியபோது, நல்லூர் திருவிழாக்காலத்தில் மற்றும் பல இடங்களில் சந்தேகநபரான கே ராஜாவுடன் சேர்ந்து யூனிட் திருடப்பட்டது தெரிய வந்தது.

மீசாலை, நாவாந்துறை, கனகம்புளியடி, அரியாலை; ஆகிய இடங்களிலிருந்து யூனிட் பொலிசாரால மீட்கப்பட்டது.

சந்தேகநபர்களுக்கு தீர்ப்பு இன்று வழங்கப்படவிருக்கிறது. (க)

# இ. அ. சங்க பொதுச்சபை கூடுகிறது

(நெல்லியடி)

பொலிகண்டி கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுச்சபைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை பொலிகண்டி அ. மி. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திரு. எம். இராஜமனோகரன் தலைமையில் நடைபெற இப்பொதுச்சபைக் கூட்டத்தில் புதிய பொதுச் செயலாளர் தெரிவு முக்கிய நிகழ்ச்சியாக [illegible] அடுத்தே பொதுச் சபைக் கூட்டம் நடைபெறுகின்றது.

# சைவ சமய பாடப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை ரீதியில் வழமையாக நடத்தப்பெறும் சமய பாடப்பரீட்சை எதிர்வரும் 2ம் திகதி நடைபெறவிருக்கிறது. 135 நிலையங்களில் ஏறக்குறைய முப்பதினாயிரம் மாணவர் பரீட்சை எழுதுவர். 10ம், 9ம், 8ம் வகுப்பில் கூடியபுள்ளியைப்பெறும் முதல் மூன்று மாணவர்களுக்கு தங்கப்பதக்கம் பரிசாக வழங்கப்பெறும். (அ)

# தலைமன்னாரில் உப்பு ஆலை

(மன்னார்)

மன்னார் பல. நோக்குக் கூட்டுறவுச்சங்கம், தலைமன்னாரில் உப்பு ஆலை ஒன்றைத் திறக்கவிருக்கிறது

இதற்கான ஒழுங்குகளை மன்னார் பல. நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மேற்கொண்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஈரான் -- ஈராக் யுத்தம்:

# ஈராக் குண்டு விமானங்களை ஈரான் சுட்டுவீழ்த்தியது!

லண்டன், அக். 30

ஈரானிற்குள் நெடுந்தூரம் நுழைந்த ஈராக்கின் குண்டு வீச்சு விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாக ஈரான் தெரிவிக்கின்றது.

ஈரானின் இருபுனித நகரங்களில் இவ் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அது மேலும் தெரிவித்தது.

ஈரானின் மேற்குப் போர் முனையில் நடைபெற்ற ஈராக்கின் தாக்குதலை முடித்து அதன் நான்கு டாங்கிகளைச் சேதப்படுத்தியதாக ஈரான் கூறுகிறது.

பாக்தாத்திற்கு அருகேயுள்ள ஈராக்கின் பெரும் எண்ணைச் சுத்திகரிப்பு ஆலைகளை ஈரானின் போர் விமானங்கள் குண்டுகளால் தாக்கியதாகவும், ஈராக்கின் டாங்கிகள் பலவற்றை கைப்பற்றியதாகவும் தெஹ்ரானிலிருந்து இராணுவ அறிக்கையொன்றை மேற்கோள்காட்டி ஈரானின் அதிகார பூர்வமான ஏஜென்ஸி 'டாஸ்' தெரிவிக்கின்றது.

இச் செய்திகளை மறுத்திருக்கும் ஈராக் போர்முனையின் மற்றொரு பிரிவில் ஈரானின் இரண்டு விமானங்களைச்சுட்டு வீழ்த்தியுள்ளதாகக் கூறுகின்றது. இப்போர்முனையில் பதினொரு ஈரானியர்கள் கொல்லப்பட்டதாகவும் அவர்களின் ஆயுதக்கிடங்கொன்று அழிக்கப்பட்டதாகவும் ஈராக் தெரிவித்துள்ளது. (வெ)

## சோவியத்கருத்து

நியூயோர்க், அக். 30

ஈரான், ஈராக் ஆகிய இரு நாடுகளும் தமக்கிடையே முயற்சிகளை மேற்கொண்டு யுத்தத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டுவருவதையே சோவியத் யூனியன் விரும்புகின்றது.

மேற்கண்டவாறு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் ஈரான்- ஈராக் யுத்தம் தொடர்பாக உரையாற்றிய சோவியத் பிரதிநிதி தெரிவித்தார். (வெ)

# சைக்கிள் 2 மோதின! சிறுவன் பலி!!

(யாழ்ப்பாணம்)

சைக்கிளில் சென்ற சிறுவன் மற்றொரு சைக்கிளுக்குப் பலியானார்.

சங்கு வேலியைச் சேர்ந்த தம்பிராசா விஜயகுமார் (12 வயது) என்ற சிறுவனின் மரணவிசாரணையில் இத்தகவல் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

சையிக்கிளில் சென்ற சிறுவனை மற்றொரு சைக்கிளில் வந்தவர் மோதிவிட்டு சென்றதாகவும் சிறுவன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார் என்றும் கூறப்பட்டது.

சைக்கிளால் மோதியதாக கூறப்படும் சங்குவேலியைச் சேர்ந்த சின்னத்தம்பி ஞானவேலு அல்லது ஞானம் என்பவரை ஆஜர் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது. பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை பின் போடப்பட்டது. (க-இ)

## பொறுப்பதிகாரி

(கம்பஹா)

கம்பஹா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. கே. சிறீதரன் பருத்தித்துறை பொலிஸ் நிலையபொறுப்பதிகாரியாக இடமாற்றப்பட்டுள்ளார். நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் இவர் தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொள்வார்.

# 2,000-ம் ஆண்டு பழமைவாய்ந்த ஆபரணக்கற்கள் கண்டுபிடிப்பு

புதுடில்லி, அக். 30

கொடைக்கானலில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழ்வாராய்ச்சியின்போது மதிப்புமிக்க ஆபரணங்களும், சிலகருவிகளும் கிடைத்துள்ளன.

இவை சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முந்தியவை என மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியச் சங்க காலம் பற்றி இவற்றின் மூலம் மேலும் தகவல்களை பெறலாமெனக் கூறப்படுகிறது. (வெ)

# கஸ்தூரியார் வீதிகொலை வழக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கஸ்தூரியார் வீதி கொலை வழக்கில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் வராததினால் விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு நேற்றுக் காலை யாழ். மேலதிக நீதவான் திரு. நாகரார்சா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் யாழ். கஸ்தூரியார் வீதியில் இவ்வருடம் ஜனவரி 1-ம் தேதி வேணு கோபாலை கொலை செய்ததாக பாலச்சந்திரன், குண்டுமணி ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஜிம்மி இராசரத்தினம் ஆஜரானார் பொலிஸ் தரப்பில் சப் இன்ஸ்பெக்டர் ஜயரத்துரை கான்ஸ்டபிள் எஸ் குணரத்தினம் ஆகியோர் ஆஜரானார்கள்.

விசாரணை நவம்பர் 27-ம் தேதிக்கு ஒத்திபோடப்பட்டுள்ளது. (க)

# 30 வருடக் ... கனவு நிறைவேறியது!

(மன்னார்)

மன்னார் ஆஸ்பத்திரிக்குத் தேவையென 30 வருட காலமாகக் கோரி வந்த 'எக்ஸ்ரே' இயந்திரம் வந்து சேர்ந்துள்ளது.

மன்னார் ஆஸ்பத்திரிக்கு 'எக்ஸ்ரே' இயந்திரத்தை பெற்றுக்கொள்ள முதூர் எம். பி.யும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனுப். எம். ஈ. எச். மஹ்றூப், மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் மன்னார் ஆஸ்பத்திரிக்குழு, மன்னார் நலன் நோக்குச் சங்கம் ஆகியோரும் பெரு முயற்சி எடுத்து வந்தனர்.

# ஈரான்—ஈராக் யுத்தத்தை நிறுத்த இந்தியா தீவிரமாக முயலும்!

## வெளியுறவு அமைச்சர் தகவல்

புதுடில்லி, அக் 30

ஈரான்—ஈராக் யுத்தத்தை முடிவுக்குச் கொண்டுவருவதில் இந்தியா தன்னாலான முயற்சிகளை மேற்கொள்ளும். இவ்விரு நாடுகளுக்குமிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதில் அணிசேரா இயக்கக் குழுவினருடன் சேர்ந்து இந்தியாவும் தீவிரமாகப் பங்குகொள்ளும்.

மேற்கண்டவாறு இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. நரசிம்மராவ் புதுடில்லியில் நடைபெற்ற தமது அமைச்சு அதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியாவது: ஈரான்- ஈராக்யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அணிசேராநாடுகளின் குழு எடுக்கும் முயற்சி பாராட்டத்தக்கது. இக்குழுவில் இந்தியாவும் இடம்பெற்றிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். ஈரானும், ஈராக்கும் இவ்யுத்தத்தை முடிவுக்குச் கொண்டுவ விரும்புகின்றன என்றார். (வெ)

"டியாகோகாஸியா" தீவுப்பிரச்னை:

# மொரீஷியஸ் கோரிக்கையை பிரிட்டன் நிராகரித்தது!

லண்டன், அக். 30

இந்துசமுத்திரத்தில் உள்ள மொரீஷியஸுக்குச் சொந்தமான 'டியாகோகாஸியா' தீவை திருப்பித்தருமாறு மொரீஷியஸ் விடுத்துள்ள கோரிக்கையை பிரிட்டன் நிராகரித்துள்ளதாக லண்டன் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரிட்டனின் அனுசரணையுடன் இத்தீவை இராணுவத்தளம் ஒன்றை அமைத்துள்ள அமெரிக்காவிடமும் பிரிட்டனிடமும் இத்தீவை தம்மிடம் திரும்பித்தருமாறு மொரீஷியஸ் கோரியிருந்தது. (இ)

அரபுமண்ணில் இஸ்ரேல் நடவடிக்கை:

# சர்வதேச ஜனநாயக வழக்கறிஞர்சங்கம்கண்டனம்

பெய்ருத், அக். 30

ஜெருஸலமுக்கு விஜயம் செய்துள்ள சர்வதேச ஜனநாயக வழக்கறிஞர் சங்கத்தின் பிரதிநிதிகள், ஆக்கிரமிக்கப்பட்ட அரபு நிலங்களில் இஸ்ரேல் கடைப்பிடிக்கும் கொள்கை சர்வதேச சட்டத்துக்கு எதிரானதாகும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

தமது ஜெருஸலம் விஜயத்தையொட்டி இங்கு நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் உரையாற்றிய வழக்கறிஞர் ஒருவர் "ஜோர்தான் நதியின் மேற்குக் கரையிலும் காசாப் பகுதியிலும் டெல் அவீவ் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் அப்பகுதியைத் தம் தாயகமாகக் கொண்டு வாழும் அரபு மக்களை அங்கிருந்து துரத்திவிட்டு அந்த நிலங்களைத் தன்னுடன் இணைப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளன" என்று குறிப்பிட்டார்.

தமது ஜெருசலம் விஜயம் குறித்துத் இவ்வழக்கறிஞர்கள் விஷேச கமிஷன் தயாரித்து வரும் அறிக்கை ஒன்று விரைவில் மால்டாவில் நடைபெறவிருக்கும் சர்வதேச ஜனநாயக வழக்கறிஞர் சங்க மாகநாட்டில் வெளியிடப்படும்.


பல பயன் தரும் சென்றிபியூகல் பம்ப்

டெல்டரிக்

பம்ப் செற் ஈ. எஸ். 25 எம்.

கொண்டு குறைந்த செலவில் குழாய் நீர் பெறுங்கள்.

யாப்பானில், கேற்றே பம்ப் மனுபக்சிலை கம்பனி லிமிட்டெட்டினால் இலங்கைக்கென விசேடமாகத் தயாரிக்கப் பெற்ற பம்ப் வெண் கலத்தாலான உற்று கருவி கொண்டது.



கையிருப்பில் உண்டு ரூ. 1350/-

உறிஞ்சி விசும் நீர்வாயின் அளவு 1'' அதிகபட்ச மொத்த நீளம் 90 அடி அதிகபட்ச இறைப்பு ஆற்றல் மணிக்கு 1000 கலன். எமது தொழிலியல் பகுதி சிறப்பான விற்பனைக்குப் பிற்பட்ட பராமரிப்புச் சேவை வழங்குகிறது. மாற்றுறுப்புகள் யாவும் கைவசமுள்ளது

டெல்மேஜ் போசைட் அன்ட் கம்பனி லிமிட்டெட்

... மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 93361-7.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

உன்னுடைய சொந்த மத நம்பிக்கையில் எப்பொழுதும் வலியுடன் ஊன்றி திடமாகநிலைத்திரு. ஆனால் மதவெறி, சகிப்புத்தன்மையில்லாமை-இவற்றை முற்றிலும் தவிர்த்துவிடு.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

(உடுப்பிட்டி)

''அமெரிக்கா போன்ற நாடுகளில குளிரூட்டுதலுக்குப் பாவிக்கப்படும் நீரைக் கூட விரயம்செய்யாது. பிவிருத்தித்துறைகளில் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு செய்யாதுவிடின் அங்கு சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அங்கு கழிவுநீரையும் நல்ல முறையில்தான் பயன்படுத்துகின்றனர்''.

# "யாழ். குடாநாட்டில் உவர் நீர் ஆபத்து!"

## தேவைக்கு அதிகமாக நீரைப்பாவிக்க வேண்டாம் என்கிறார் விரிவுரையாளர்

இவ்வாறு பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. நந்தகுமார் புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றத்தில்நடைபெற்ற'யாழ். குடாநாட்டின் நீர்வளமும் நிலவளமும்' என்னும் கருத்தரங்கில் பேசுகையில் கூறினார். இக்கருத்தரங்கு பருத்தித்துறைக் கல்விவட்டச் செயலாளர் திரு. க நடனசபாபதி தலைமையில் நடைபெற்றது.

கருத்தரங்கைப் பருத்தித்துறை லயன்ஸ்கழகம், இலங்கை விஞ்ஞான அறிவியல் பரப்புக் கனிஷ்ட சங்கம், இயற்கை அபிவிருத்தி இயக்கம், பருத்தித்துறைக் கல்வி வட்டம், ஞானசம்பந்தர் கலைமன்றம் ஆகியன இணைந்து ஒழுங்குசெய்திருந்தன. விரிவுரையாளர் திரு. நந்தகுமார் மேலும் கூறியதாவது:

''யாழ். குடாநாட்டில் குழாய்க்கிணறுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இக்குழாய்க் கிணறுகளால் தொடர்ந்தும்நன்னீரைப் பெறமுடியுமா? முற்காலத்தில் பட்டைமூலம் துலாமிதித்து நீர் இறைக்கும்போதுகிணற்று நீரில் சமநிலை ஏற்பட்டது. ஆனால் குழாய்மூலம் நீரிறைக்கும்போது அமுக்கம் காரணமாக உவர்நீர் நன்னீருடன் கலக்க இடமேற்படுகின்றது.

''நீரைப் பாவிப்பதில் யாழ். குடாநாட்டு மக்கள் கூடிய கவனம் செலுத்தவேண்டும். நீரை வீணாக்காது சிக்கனமாகப் பாவிப்பதன்மூலமே நீரைப் பாதுகாக்க முடியும், நீரைத் தேவைக்கதிகமாகப் பாவித்தால் விரைவில் உவர்நீரைத்தான் நாம் பெறமுடியும்.

''நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பாவித்து நீரைத் தேவைக்கு அதிகமாக இறைக்கும்போது கூடிய அமுக்கம் காரணமாக நன்னீருக்கு அடியில்உள்ள உவர்நீர்ப் படிவங்கள் நன்னீர்மட்டத்தை அடைந்து நன்னீருடன் கலந்து உவர்நீராக மாற்றும் அபாயம் ஏற்படுகிறது.

''தமிழ்நாட்டில் கிணறுகள் வெட்டுவதற்கு, கிணற்றின் விட்டம், ஆழம், கிணறுகள் அமைந்துள்ள தூரம் ஆகியனவற்றை அவதானித்தே 'பர்மிட்'வழங்கப்படுகின்றது, இந்தியாவில் இயந்திரம்மூலம் கிணற்றுநீரைப் பாவிப்பதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் யாழ். குடாநாட்டில் எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லை. யாழ். குடாநாட்டில் நன்னீரைப் பாவிப்பது ஒவ்வொரு தனிமனிதனதும் கடமையாகும். இதனை அரசாங்கத்தின் மூலமோ, பொதுஸ்தாபனங்களின் மூலமோ செய்யலாம் என்று நினைக்கச்கூடாது.

''விவசாயத்தில் உரவகைகளையும், கிருமிநாசினிகளையும் பாவித்து வருவதால் நீரிலும், நிலத்திலும் நச்சுத்தன்மை படருவதால் உற்பத்தியாக்கப்படும் உணவுப் பொருட்களில் செறிந்திருக்கும் குறைந்தளவு நச்சுத்தன்மையே மனிதகுலத்தின் ஆயுட்காலத்தை வெகுவாகக் குறைத்துள்ளது.

''நாம் ஒவ்வொருவரும் நீரை எமது வீடுகளில் சேமிக்கப் பழகவேண்டும். எமக்குக் கிடைக்குப் வருடாந்த மழைவீழ்ச்சியில் ஐம்பது வீதம் கடலுக்குள்ளேயேவீணாகச்செல்லுகின்றது. இதனை நாம் தடுத்து மழைநீரை உரியமுறையில் சேமித்தால் யாழ். குடாநாட்டைப் பசும் சோலையாக மாற்றலாம். எமது பகுதி மக்கள் மழைநீரைச் சேமித்து வைப்பதில்லை. யாழ். குடாநாட்டில் நன்னீரை அபிவிருத்திசெய்ய இக்குடாநாட்டிலுள்ள உவர் ஏரிப் பிரதேசங்களை நன்னீராக்குவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும்'' என்றார்.

## நமது நோக்கு

### உண்மையை நாடும் உத்தமர்

''பொறுத்தல் இறப்பினை என்றும்; அதனை மறுத்தல் அதனினும் நன்று''.

நமக்குத்தீமை விளைவிக்கப் பிறர் செய்யும் தருமம் வழுவிய செயல்களை நாம் எப்போதும் பொறுத்துக் கொள்ளவேண்டும்.

பொறுமையைவிட மேலான செயல் ஒன்று உண்டு. அது பிறன் ஒருவன் இழைத்த தீங்கை மறந்தே விடல் வேண்டும்.

வருகிறவாரம் அரசாங்க விருந்தினராக இலங்கைக்கு விஜயம் செய்யும் அகில உலகப் புகழ்பெற்ற மெய்ஞ்ஞானி ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி வழங்கிவருந்தத்துவ சிந்தனை எவ்வகையில்தனித்துவமானது?

இப் பெரியாரின் அருளுரை கேட்டு அனுபவித்த பலர் கேட்கும் கேள்வி இதுவேயாகும். சாதாரண மனிதனுக்குப்புரியமுடியாத சிந்தனையே கிருஷ்ணஜீயின் செல்வமென்பது பொது அபிப்பிராயம். அது உண்மையாயினும், அரிய மானிடப் பிறவியெடுத்தவனும் உணரமுடியாத ஒன்றை அவர் புகட்டுவாராயின் அதனாற் பயனென்?

தமிழ் மக்களின் அழியாச் செல்வம் முனிவர் தந்த குறள். இதனிற் சொல்லப்படாத ஒன்றை எவரேனும் சொல்ல வல்லவரா? இந்த வினாவிற்கு விடைகாணும் வகையில் மேலே சொல்லப்பட்ட பொய்யாமொழி அமைகிறது.

ஆடாது அசையாது சாந்தமே உருவெடுத்தாற் போல், கம்பீரமான தோற்றமுடைய தெய்வீக மனிதன் ஒருமணி நேரத்துக்கு அருளுரைவழங்குவது கண்கொள்ளாக் காட்சி, உரை புரியாத நிலையிலும், தெய்வீகத்தன்மை நிரம்பி வழியுங்காட்சி அறிவுப்பசியைத் தீர்க்கவல்லது.

''மனிதன் தனது மனத்தை எதனையும் மறக்கப்பழக்கிவைத்தாலொழிய வாழ்வாங்கு வாழுதல் அரிது'' என்று அடிக்கடி சுட்டுவிரல்காட்டி ஒளிவீசுங் கண்களால் கேட்போரை திசப்த ஆனந்த நிலையில் அடக்கிவிடவல்லவர் கிருஷ்ணஜி அவர்கள்.

சாதி, குலம், பிறப்பு, மதம், செல்வம், வறுமை, சமூக அந்தஸ்து, புகழ் போன்ற பல அடிப்படைகளில் பிரிவினைப் பட்டு, சுழிப்பட்டுத் தடுமாறும் உலகுக்கு புத்துயிர்கொடுக்கும் அருமருந்தை வழங்கி வரும் இப்பெரியார் இன்று 85 வயது நிரம்பிய பூரண ஞானி. இவர் ஆந்திரப்பிர தேசத்தில், மதனப்பள்ளி என்னும் ஊரில் இயற்கை வனப்பு நிறைந்த சுற்றாடலில் ஒரு பிராமண குலத்தில் அவதரித்தவர். சிறு பிள்ளைப் பருவத்திலேயே இவரில் காணப்பட்ட அசாதாரண திறமைகாரணமாக இவருக்கு வேண்டிய கல்வி வசதிகளை ஊட்டி, உலகங் காத்திருக்கும் இரட்சகர் இவரே என்ற நம்பிக்கை கொண்ட அன்னிபெசன்ட் அம்மையார் இவரை வளர்த்துவந்தார்.

மனிததெய்வம் என்று உலகெங்கும் புகழ்பரவ அதைக் கண்டு அஞ்சி அந்தப் பிரசித்தியை வெறுத்து தவக்கோலங் கொண்டு, வாழ்க்கையில் ஏற்பட்ட இன்பதுன்பங்கள் மூலம், அமெரிக்காவின் கலிபோனியா என்ற இடத்தில் உள்ள ஆச்சிரமத்தில் 1922ம் ஆண்டு வாழ்வில் பெரும் மாற்றம் கண்டார். 1925ம் ஆண்டு அவருடைய அருமைச்சகோதரன்இறந்ததும், அதன் தாக்கத்தால் அவருடைய ஞானநிலை பூரணத்துவம் அடைந்ததென்பர்.

''உலகில் அதிகரித்து வரும் வறுமை, பசி, பட்டினி, வன்செயல் முதலிய தீமைகளை இன்றைய மனிதன் அகற்றும் ஆற்றலற்றவன்; அவனுடைய சமயம், அவனுடைய விஞ்ஞான வளர்ச்சி, சிந்தனைத்திறன் யாவும் அழிவுப்பாதையையே நாடிநிற்கின்றன.''

''வைதீகசமயங்கள் என்றாலென்ன, போட்டியிடும் விஞ்ஞானிகளின் படைப்புகளென்றாலென்ன — இவை யாவும், ஒருவரை ஒருவர், ஒருநாட்டை இன்னொரு நாடு குட்டிமுந்தும் குழப்ப நிலையையே தேடிச்செல்கின்றன''-

'இனிவரும் இளஞ்சந்ததியினர் பள்ளத்தைநாடிப் போகும் உலகை மீட்க முடியும், அது உண்மையான கல்விமுறையால் தான் ஆகும். அது என்ன? குழந்தையில் இயல்பாக இருக்கும் ஆத்மீக சக்தியும், சிந்தனசக்தியும் இயற்கையிலே மலர உதவுங் கல்வித்திட்டம் பெரிதும் வேண்டப்படுகின்றது'.

தொழில்நுட்ப சக்தி இன்றைய உலகுக்கு அவசியம்; அதேசமயம் மனிதன் தன்னை அறியும் திறமையும் அவசியம். மதிநுட்பத்தால் எந்தச் சிக்கலான விடயத்தையும் ஆராயுந்திறன் எவ்வளவு அவசியமோ, தனது சிந்தையை அடக்கி'சும்மாவிருக்குந் திறனும். அவ்வளவு அவசியம்''.

மெய்ஞ்ஞானி கிருஷ்ணமூர்த்தியின் இவ்வித சிந்தனைப்போக்கை இன்றைய உலகில் அல்லற்படும் நாமெல்லோரும் உணர முயல்வது மிகவும் விரும்பத்தக்கது. இலங்கை வரும் இவ்வற்புத மனிதன் கொழும்பிலிருக்கும் 'நவரங்கால' மண்டபத்தில் மக்களுக்குக் காட்சியளித்து அருள்விருந்து ஆற்றுவார்.

''ஒழுங்கு, கட்டுப்பாடு என்ற அடிவேரிலே இருந்து வளர்வதே சுதந்திரம். இன்று சுதந்திரம்தேடி அலையும் மனிதன் அம்மரத்தின் அடிக்கு நீரிறைக்காமல் கொப்புக்களில் கவனஞ் செலுத்துகிறான்' என்ற பாணியில் முடிக்கும் இவ்வதிசய மனிதனின் அருளுரை எல்லா மக்களுக்கும் கிட்டுமாறு அரசு ஒழுங்கு செய்ய முடியாதா?

நல்லாரைக் காண்[illegible] நன்று என்பது எம்மில் பலருக்கும் எட்டாத காரியம்.

ஈரானில் மீண்டும்

## ஆதிக்கத்தை நிலைநிறுத்த அமெரிக்கா விரும்புகிறதா?

சவூதி அரேபியாவுக்கு, ராணுவ சாதனங்களின் புதிய தொகுதியொன்றை அமெரிக்கா அனுப்பியுள்ளதக வாஷிங்டன் தெரிவித்துள்ளது.

ரடார் அமைப்புகளும் தகவல் சாதனங்களும் இவற்றுள் உள்ளடங்கும் என்றும் இவற்றைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான ராணுவ நிபுணர்கள் சவூதி அரேபியாவுக்கு வரவுள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன..

பாரசீகக் குடாப் பிராந்தியம் முழுவதையுமே 'எலக்ட்ரோனிக்' சாதனங்கள் மூலம் 'பண்டகன்' கவனித்து வருகிறது. தற்போது இந்து சமுத்திரத்தின் வடபகுதியில் நிலைகொண்டுள்ள அமெரிக்க ராணுவ பலத்துக்கு அவசியமான தகவல்களை அளிப்பதே பண்டகனின் நோக்கம். இங்குள்ள அமெரிக்க ராணுவ பலம் இப்பகுதி நாடுகள் சகலவற்றினதும் ராணுவ பலத்தைக் காட்டிலும் அதிகமானது என்பதை அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் ஹரோல்ட் பிரவுண் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்து சமுத்திரத்திலுள்ள அமெரிக்க ராணுவப் பிரிவுகள்; எந்த நேரத்திலும் தயாராக இருக்கும் வகையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதற்கிடையில் ''சர்வதேச கடற்படை'' ஒன்றை உருவாக்கும் யோசனையையும் அமெரிக்கா முன்வந்துள்ளது. பிரிட்டன் ஏக்கனவே ஒமானியா குடாவுக்கு ஏவுகணைகளைக் கொண்ட நாசகாரிகளை அனுப்பி வைத்துள்ளது. ஈரானிய - ஈராக் போரும், இந்த ராணுவ தயாரிப்புகளுக்கு ஒரு காரணமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பாரசீகக் குடா இந்துசமுத்திரப் பகுதியில் அமெரிக்கா தனது ராணுவத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய காரணம் என்ன? ஈரானில் மீண்டும் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதும், அரபு உலகின் ஐக்கியத்தைக் குலைப்பதும் தான் அமெரிக்காவின் பிரதான குறிக்கோள் என்று கூறும் அரசியல் அவதானிகள் இப்பகுதி நாடுகள் தமக்கிடையிலான பிணக்குகளுக்கு விரைவில் அரசியல்தீர்வு காண வேண்டிய அவசியத்தை காலம் நாளுக்கு நாள் வலியுறுத்திக் கொண்டே வருகிறது என்று தெரிவிக்கின்றன.

— 'அவதானி'

## மக்கள் கருத்து

### ரயில்வே பகுதியினர் கவனிப்பரா?

யாழ்ப்பாணத்திலிருந்துகாங்கேசன் துறைக்குத் தினமும் இரவு 7-05 மணிக்குப் புறப்படும் குறுகியதூர ரயில்வண்டி கடந்தவாரம்முதல் நிறுத்தப்பட்டுள்ளதால் இந்த ரயில் மூலம் இதுவரை பிரயாணத்தை மேற்கொண்டு வந்த நூற்றுக்கணக்கான பயணிகள் பெரிதும் அவதிக்குள்ளாகின்றனர்.

முக்கியமாக யாழ். பல்தொழில்நுட்ப நிலையத்தில் மாலைநேர வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களே இந்த ரயில்சேவை ரத்துச் செய்யப்பட்டதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நிறுத்தப்பட்டுள்ள ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிக்கமுடியாவிடின் இரவு 7 மணிக்கு பளையிலிருந்து புறப்பட்டு 10 மணியளவில் யாழ் வந்து காங்கேசன்துறை செல்லும் ரயிலை 7 மணியளவில் யாழ். வரும்படி செய்தால் மேற்குறிப்பிட்ட ரயில் பிரயாணிகள் முக்கியமாக மாணவர்கள் பெரிதும் நன்மையடைவார்களென்று எதிர்பார்க்கிறோம். ரயில்வே திணைக்களம் எமது அவதியைப்போக்க நடவடிக்கை எடுக்குமா?

[illegible] மாணவர்கள்
கொக்குவில்.

## சன சமூக நிலையம்

(நெல்லியடி)

அல்வாய் கிராமத்தில் அந்திவருள் சன சமூக நிலையமொன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்புதிய சன சமூக நிலையத்தினை இளைப்பாறிய பாடசாலை அதிபர் திரு மா. சுப்பிரமணியம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.

சன சமூக நிலையப் போசகர் திரு. ஆ. கதிர்காமத்தம்பி தலைமையில் சன சமூக நிலைய ஆரம்பவிழா சிறப்பாக நடைபெற்றது.

## நூலகத்துக்குப் புதிய புத்தகங்கள்

(புலோலி)

வடமராட்சி கிழக்குப்பகுதியான குடத்தனை கிராமாட்சி மன்றப் பகுதிக்குட்பட்ட மக்களின் நன்மை கருதி கிராமாட்சி மன்ற பொதுசன நூல் நிலையத்திற்கு 5,000 ரூபா பெறுமதியான புதிய புத்தகங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை கிராமாட்சி மன்றத்தின் விசேட ஆணையாளரும், வடமராட்சி வடக்கு கிழக்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபருமான திரு. வை. வேலும்மயிலும் மேற்கொண்டுள்ளார்.

## புளியங்குளத்தில் 30 வீடுகள்

(புளியங்குளம்)

வவனியாத் தொகுதிக்கான அடுத்த 30 வீடுகள் புளியங்குளக்கிராமத்தில் கட்டப்படவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடுமாதா ஆலய அபிவிருத்தி வேலைகள்: பிரதமர் பொறுப்பேற்றார்!

(நமது மன்னார் நிருபர்)

மன்னார் பெரியகுஞ்சுக்குளத்தில் மாதா மாதிரிக கிரமத்தைத் திறந்து வைக்க மன்னார்க்கு விஜயம் செய்திருந்த பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா, மடுமாதா ஆயலத்திற்கும் விஜயம் செய்தார்.

மடுமாதா ஆலயத்திற்கு விஜயம் செய்த பிரதமரை யாழ். அதிமேற்றிராணியார் வண தியோகுப்பிள்ளை ஆண்டகையும், மடுமாதா ஆலயப்பங்குக் குரவர் வண. பிதா சாள்ஸ் செந்திவேலுவும் மலர்மாலை சூட்டி வரவேற்றனர். வரவேற்பைத் தொடர்ந்து மடுமாதா ஆலயத்தில் விசேடபூசை ஒப்புக் கொள்ளப்பட்டது. பின்னர் எட்டரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நீர்த் தொட்டியினை பிரதமர் திறந்து வைத்தார்.

இவ்வைபவத்தில் யாழ். அதிமேற்றிராணியார் வண தியோகுப்பிள்ளை ஆண்டகை தமதுரையில்:

எட்டரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நீர்த்தொட்டி திறந்து வைத்ததால் மடுமாதா ஆலயப்பகுதியில் குடிநீப் பிரச்சனை தீர்ந்துள்ளது. ஆனால் தகவல் சேவை மிகவும் தரம் குறைவாகவே உள்ளது. மடுமாதா ஆலயத் தபாலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும். மடுவீதியிலிருந்து மடுமாதா ஆலயத்திற்கு வரும் வீதியின் அலகம் மிகவும் குறைவாக உள்ளது. அதனால் இவ்வீதியை பிரதமர் அகலமான வீதியாக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மடுமாதா ஆலயத்தில் 30 வருட பழமை வாய்ந்த டீசல் மின்சார இயந்திரம் செயல்பட்டு வருகிறது இதற்குப் பதிலாக நேரடி மின்சாரம் விநியோகிக்கப்பட வேண்டும்'' என்று கோரினார்.

இதற்குப்பதிலளித்து உரையாற்றிய பிரதமர்,

''மடு வீதியிலிருந்து மடுமாதா ஆலயத்திற்கு வரும் வீதியை அகலமாக்கும் வேலையை நாளையே ஆரம்பிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிக்கவிருக்கிறேன். மன்னார் மாவட்டத்தில் வாழும் மக்கள் இரண்டாந்தர மக்களாகக் கணிக்கப்படுவதை நான் ஒருபோதும் விரும்பமாட்டேன். மடுமாதா ஆலயத்தின் சகல அபிவிருத்தி வேலைகளையும் நான் பொறுப்பேற்கிறேன். மடுமா ஆலயத்திற்கு இன்றுதான் முதன் முதலாக வந்திருக்கிறேன். அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெறும் திருவிழாவிற்கு நான் நிச்சயம் வருவேன் சமய ஆலயங்களே ஒருமனிதனை மனிதனாக வாழ வைக்கிறது. ஆதலால் ஆலயங்களை அபிவிருத்தி செய்ய வேண்டியது அவசியமாகும் ஆலயத்தின் சேவை எமக்குத் தேவை. மடுமாதா ஆலய அபிவிருத்திவேலைகள் விரைவில் நடைபெற நடவடிக்கை எடுப்பேன்'' என்று பிரதமர் உறுதியளித்தார்.

## சபையில் சிந்தியவை

அமைச்சர் இராசதுரை:

கதிர்காமம் இராமகிருஷ்ண மிஷன் மண்டபம் பற்றி இங்கு பலர் மனத்தாங்கல்களுடன் பேசியிருந்தார்கள், அப்பிரச்சனையைத் தீர்க்க எமது ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

எம். சிவசிதம்பரம்: அரசு சுவீகரித்த அந்த மடத்தை ஜனாதிபதி திருப்பித் தருவாரா?

இராஜதுரை: அதற்கு நஷ்டஈடு கொடுப்பதற்கு ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

அமிர்: அதற்கு மூன்று ஆண்டுகள் சென்றிருக்கிறதே.

இராஜதுரை: நீங்கள் இதுவரை பல விஷயங்கள் பற்றி ஜனாதிபதியுடன் பேசியிருக்கிறீர்கள், இவற்றையும் பேசியிருக்கலாமே?

அமிர்: உங்களைப் போல் மந்திரிப் பதவி பற்றி நாம் பேசவில்லை. (ம-இ)

## வான் மரத்துடன் மோதி ஒருவர் பலி!

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன உதிரிப் பாகங்களை யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்ய வானில் யாழ்ப்பாணம் வந்தவர், வவனியா காட்டுக்குள் மரத்துடன் மோதி மரணமானார்.

ஒப்பில் கொடவை சேர்ந்த விகிதரான கே. பிரேமரத்னாவின் (32 வயது) மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

வான்விபத்தில் காயமடைந்த வான் சாரதி மாங்குளம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

இறந்தவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார் என்றும் கூறப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி வான் சாரதியை வவனியா நீதிமன்றத்தில் ஆஜர்செய்யும்படி பொலிசாருக்கு பணித்தார். பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை பின் போடப்பட்டுள்ளது. (க)

## உரக்களஞ்சியம்

(புலோலி)

பருத்தித்துறைத் தொகுதி விவசாயிகள் தமக்குத் தேவையான உரவகைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அனுபவித்துவந்த கஷ்டங்களை நீகுமுகமாக புதிய உரக்களஞ்சியம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. பருத்தித்துறை அம்பன் கமநலச்சேவை நிலைய வளவில் 30,000 ரூபாசெலவில் அமைக்கப்படவுள்ள உரக்களஞ்சியத்தை அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## பரீட்சைகளில் திறமைச்சித்தி

(யாழ்ப்பாணம்)

''வட்டுக்கோட்டை கலாநிலையத்தில் பயிற்றப்பட்ட சங்கீத மாணவர்கள் வட இலங்கை சங்கீத சபையினரால் நடத்தப்படும் பரீட்சைகளில் பல் திறமைச் சித்திகளைப் பெற்றுள்ளனர்:''

மேற்கண்டவாறு காலநிலைய இபக்குநர் திரு க. கயிலாயநாதன் கலாநிலையத்தில் நடைபெற்ற 18-வது ஆண்டு கலைமகள் விழாவில் உரையாற்றுகையில் கூறினார்.

இவ்விழாவில் நிலையமாணவர்களின் பாட்டு, வயலின், கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# ''இறைவனுக்கு தம்மைமுற்றாக அர்ப்பணித்தவர்களே சிறந்தஊழியர்கள்''

## ஹட்சின்ஸ் அம்மையாருக்கு வெள்ளிவிழாவில் பாராட்டு

(அரியாலை)

'இறைவனுக்குத் தம்மை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தவர்களே சிறந்த ஊழியக்காரர்களாவர். செல்வி எம். வி. ஹட்சின்ஸ் அம்மையார் கிறீஸ்தவ மிஷனரி ஊழியருக்கு தம்மை ஒப்புக்கொடுத்து சிறந்த மிஷனரியாக இப்பகுதியில் ஆற்றிய அளப்பரியசேவையினால் இப்பகுதி முன்னேற்றமடைந்துள்ளது. தனதுபிறந்த நாட்டையும், உடன்பிறந்தவர்களையும் விடுத்து இறைவனின் ஊழியத்தை மேற்கொண்டு, இறைவனுக்குத் தன்னை அர்ப்பணித்து தனது ஊழியத்தை செய்து வருகிறார்''

இவ்வாறு கொழும்பு திருமண்டல ஆர்ச்டீக்கன் அருட்திரு ஜே. ஜே. ஞானப்பிரகாசம் அடிகளார் கிளிநொச்சி கருணாநிலையத்தில் கிறிஸ்தவ மிஷனரியாக ஊழியஞ்செய்துவரும் செல்வி எம், வி. ஹட்கின்ஸ் அம்மையாரின் மிஷனரி ஊழியத்தின் வெள்ளி விழா வைபவத்திற்கென ஏற்பாடுசெய்யப்பட்ட நன்றிதெரிவிக்கும் திருவிருந்து ஆராதனையில் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

கொழும்பு திருமண்டலம் பேராயர் வணக்கத்துக்குரிய சுவீதின் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் நடைபெற்ற இந்த ஆராதனையில் அருட்திரு. ஞானப்பிரகாசம் அடிகளார் தமது அருளுரையில் மேலும் கூறியதாவது:

''கடவுளின் சித்தப்படியே எல்லாம் நடைபெறுகிறது: இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னரை வனந்தரப் பிரதேசமாக இருந்த கிளிநொச்சிப் பகுதியில் இப்படியானபான ஒரு ஊழியத்தை இறைவனின் வழிநடத்தல் இல்லாமல் மேற்கொண்டிருக்க முடியாது. மிஷனரி ஊழியத்தை மேற்கொள்பவர்கள் உண்மையும், கடவுள் பக்தியுமுள்ளவர்களாக இருப்பதுடன். எதையும் துணிவுடன் மேற்கொள்ளும் போர் வீரனைப் போலவும், வெற்றி தோல்வி என்று பாராது போட்டியில் பங்கெடுக்கும் பந்தய வீரனைப் போலவும், பாடுபட்டுழைக்கும் சிறந்த உழைப்பாளியாகவும் இருக்க வேண்டும். இதனையே திருமறை எமக்குக் கூறுகிறது. இப்படியான சகல குணாதிசயங்களையும் கொண்ட ஊழியக் காரியாக இறைவனின் திருத்தொண்டை மேற்கொண்டு அம்மையார் ஆற்றிவரும் திருப்பணிகள் இறைவனின் சித்தத்திற்குட்பட்டதாக அமைந்தது. யேசுவின் கிருபையில் பலப்பட்டு கடவுளோடு ஒப்புரவாகி, கடவுளின் கட்டளைக்குக்கீழ்ப்படிந்து இந்த நல்ல சேவைகளை இப்பகுதிக்கு ஆற்றி வரும் அம்மையாரின் இறை சேவையையும், பொதுசன ஊழியத்தையும் இறைவனுக்கு ஒப்புகொடுத்து இறைவனுக்கு நன்றி தெரிவிப்போம்.

நன்றி தெரிவிக்கும் திருவிருந்தாராதனையை கொழும்பு திருமண்டலப் பேராயர் தலைமையில் யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருட். திரு. சாம். டி. ஹோர்சிங்டன் அடிகள் வட. கீழ்ப்பகுதி மெதஸ்டிஸ்த திருச்சபைத் தலைவர் அருட். திரு. வெஸ்லி. அரியராசா அடிகள், நவஜீவன் அதிபர் அருட்திரு. ஏ. சி. தம்பிராசா அடிகள், சுன்னாகம் கிறீஸ்தவ சேவா ஆச்கிரமத் தலைவர் அருட்திரு. சாம், அல்பிரட். அடிகள், கொழும்பு திருமண்டலப் ஆர்ச் டீக்கன் அருட்திரு. ஞானப்பிரகாசம் அடிகள், அருட்திரு ஐசக். செல்வரத்தினம் அடிகள், சர்வானந்தம். அடிகள், அருட்திரு. அல்பிரட் சின்னையா அடிகள், அருட்திரு. கோயில் பிள்ளை அடிகள் ஆகியோர் ஒப்புக்கொடுத்தனர்.

இவ்வாராதனையில் வடபகுதியைச் சேர்ந்த அங்கிலிக்கன் திருச்சபையினரும், கிளிநொச்சிப் பகுதி மக்களும் பெருந்தொகையாகக் கலந்து கொண்டனர். (அ)

## பண்டிதமணியின்

## 'கம்பராமாயணக் காட்சிகள்' கொழும்பில் அறிமுகவிழா

(கொழும்பு)

இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை எழுதிய 'கம்பராமாயணக் காட்சிகள்' அறிமுக விழா 2-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

கலாநிதி க. செ. நடராசா தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் வித்துவான் க. சொக்கலிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவார். ஸ்ரீ கி லக்ஷ்மண ஐயர் நூலை அறிமுகம் செய்து வெளியிட்டு வைப்பார்.

தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் திரு. கே. சி. தங்கராசா முதற் பிரதியையும், திரு. வேலுப்பிள்ளை சண்முகநாதன் சிறப்புப் பிரதியையும் பெறுவர்; கலாநிதி இ. பாலசுந்தரம், பண்டிதர் சு. வேலுப்பிள்ளை, திருமதிசெல்வநாயகி ஸ்ரீதாஸ், திரு. த. கனகரத்தினம், திரு. க. கந்தசாமி ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர். திரு. அ. பஞ்சாட்சரம் பதிலுரை ஆற்றுவார். (ஈ)

# ''தமிழ் மக்களிடையே பிரிவினைஒழிந்தாலே இலட்சியத்தை அடையலாம்'' – கூட்டணித்தலைவர்

(புலோலி)

'தமிழினத்தைப் பொறுத்தவரை தமிழினம் இன்று ஒரு சோதனை மிக்க காலகட்டத்தில் இருக்கிறது.

நாம் எமக்குள் உள்ள பிரிவினைகளைக் களைந்து ஒற்றுமையுடன் செயற்பட்டு வரும் போதுதான் எமது இலட்சியத்தை அடைய முடியும்.'

இவ்வாறு பருத்தித்துறை நெப்போலியன் விளையாட்டுக் கழகமும், ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்திய விளையாட்டு விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பி.யுமான திரு. எம். சிவசிதம்பரம் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. எம். வேலும் மயிலும் தலைமையில் பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் நடைபெற்ற இவ்விளையாட்டு விழாவில் தொடர்ந்து உரையாற்றிய கூட்டணித் தலைவர் திரு. சிவசிதம்பரம் கூறியதாவது;-

விளையாட்டுத்துறை மக்களிடையே ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும், ஒற்றுமைமையையும் ஏற்படுத்தி அவர்களுடைய நல்வாழ்வுக்கு வழி காட்டுகின்றது. தோல்வி தான் வெற்றியின் அறிகுறி. எனவே தோல்வியடைபவர்கள் துவண்டுவிடாது அடுத்தபடியான வெற்றியைப் பெற முயற்சிக்கவேண்டும்.

ஒரு படையானது செல்லும் போது படைத்தலைவரின் ஆணைப்படி எவ்வாறு செல்கின்றதோ அதுபோன்று விளையாட்டுக்களில் ஈடுபடும் இளைஞர்களும் ஒழுங்கு, கட்டுப்பாட்டுடன் செயற்பட்டுவர வேண்டியது மிகமுக்கியம் என்பதை எமது இளைஞர்கள் உணர்ந்து செயற்படவேண்டும்.'

விழாவிற்குத் தலைமை வகித்த பருத்தித்துறை நகர சபைத் தலைவர் திரு. எம். வேலும் மயிலும் பேசுகையில். 'ஒற்றுமைதான் எமது குறிக்கோளை அடைய வழி வகுக்கும்' என்றார்.

இவ்விழாவின் போது நெப்போலின் விளையாட்டுக்கழகத்தின் தலைவரான செல்வன் புவனேந்திரன் 3 தொன் எடையுள்ள வான்வண்டியொன்றைத் தனது தோளில் இழுத்துச் சாதனை புரிந்தார். (அ)

## சன சமூக நிலைய:

## கட்டட விஸ்தரிப்பு நிதி ஒதுக்கீடு

(நெல்லியடி)

நல்லூர் சங்கிலியன் சன சமூக நிலையத்தின் கட்டிட விஸ்தரிப்பு வேலைகளுக்காக, நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பத்தாயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

திரு. மு. சிவசிதம்பரம் அடுத்தாண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்தும் இச் சன சமூக நிலைய விஸ்தரிப்பு வேலைகட்கு மேலும் நிதி ஒதுக்கீடுசெய்ய, மேற்படி சன சமூக நிலைய நிர்வாகிகளுக்கு உறுதியளித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறைக்கு விரைவில் குழாய்நீர்த்திட்டம் வரும்

## -- நகர முதல்வர்

(புலோலி)

''நாம் தேசிய விளையாட்டுகளுக்கு ஊக்கமளித்து பாரம்பரிய விளையாட்டு மரபைப் பேணிக் காக்கவேண்டும்'' என்று பருத்தித்துறை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தின் 9-வது ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பருத்தித்துறை நகராளுமன்றமுதல்வர் திரு. எம். வேலும்மயிலும் குறிப்பிட்டார். கழகத் தலைவர் திரு எம். இரத்தினசோதி தலைமையில் பருத்தித்துறைநிக்கமுனைமைதானத்தில் நடைபெற்ற இவ்விழாவில் தொடர்ந்து உரையாற்றிய திரு. வேலும்மயிலும், 'பருத்தித்துறை நகர அபிவிருத்திக்கென நகராளுமன்றம் பல அபிவிருத்தித் திட்டங்களைச்செயற்படுத்தவுள்ளது. இங்கு நிலவிவரும் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக வெகு விரைவில் பருத்தித்துறையில் குழாய்நீர் விநியோகத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்படும்' என்றார்.

உலகசாதனைவீரன் ஆழிக்குமரன் ஆனந்தன் விழாவில் கௌரவிக்கப்பட்டார். இதனை அடுத்து திரு.ஆனந்தன் உரையாற்றுகையில் ''வடமராட்சிப் பகுதிக்குப்புகழைத்தேடித்தரக் கூடிய நடவடிக்கைகளில் எமது இளைஞர்கள் ஈடுபட வேண்டும். இதனைக் கருத்திற்கொண்டே நான் பலஉலக சாதனை முயற்சிகளை மேற்கொண்டுவருகிறேன். இன்னும் சிலநாட்களில் நான் மோட்டார்சைக்கிளை விரைவாகச் செலுத்துவது, தொடர்ந்து பல நாட்கள் நீச்சல்செய்வது, டிஸ்கோ நடனத்தில சாதனைகள் செய்வது போன்றவற்றில் சாதனைகளைப் புரியவுள்ளேன். அடுத்து இந்தியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்கும் சென்று அங்கும் பல சாதனைகளை நிலைநாட்டவுள்ளேன்'' என்றார்.

சட்டத்தரணி கிருஷ்ணராசா, நகராளுமன்ற உறுப்பினர் திரு. மு. பொ. வீரவாகு ஆகியோரும் பேசினர்.

விளையாட்டுப் போட்டிகளுக்கான பரிசில்களை நகராளுமன்றத்தலைவர் திரு. எம். வேலும்மயிலும், நகராளுமன்ற ஐக்கியதேசியக்கட்சி உறுப்பினர் திரு. எஸ். வி. சந்திரசேகரம், சுயேச்சை உறுப்பினர் திரு. எம். பி. வீரவாகு, டாக்டர் சண்முகநாதன், சட்டத்தரணி என். கிருஷ்ணராசா ஆகியோர் வழங்கினார்கள்.

ஆழிக்குமரன் ஆனந்தன் குழுவினரின் டிஸ்கோ-லிம்போ நடனக்காட்சிகளும், நாகேந்திரனின் கதம்ப நிகழ்ச்சிகளும், பருத்தித்துறை கலைஞர் வட்டத்தினரின் தைமூர் (முகலாய வரலாறு) நாடகமும் இடம்பெற்றன. (அ)

## பண்டாரவன்னியன் நினைவுதின விழா

(ஒட்டுசுட்டான்)

பண்டாரவன்னியன் நினைவு தினப்பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை பண்டாரவன்னியன் நினைவுக்கற்சிலை நிறுவப்பட்டுள்ள கற்சிலைமடுவில் கொண்டாடப்படுகிறது.

இவ்விழாவில் பிரதம அதிதியாக எதிர்க்கட்சி முதல்வர் திரு.அ. அமிர்தலிங்கம் கலந்துகொள்வகர். பேச்சாளர்களாக கூட்டணித்தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், உட்படக் தமிழர் விடுதலைக் கூட்டணிப்பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொள்வார்கள்.

இன்று மாலை பண்டாரவன்னியனின் நினைவுச் சிலைக்கு அஞ்சலியும், பொதுக்கூட்டமும், கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

இன்றைய தினம் நெடுங்கேணியிலும் நினைவு விழா கொண்டாடப்படுகிறது.

## வேலைக்குப்போ என்றார் அண்ணன் தற்கொலை செய்தார் தங்கை

(வவுனியா)

'எனது தங்கை விஜயகுமாரி ஜி. சி. ஈ. படித்தவர். பொழுதை வீணடித்துவந்தார். அடிக்கடி வெளியில் போய் வருவதும் வழக்கம். பல இடங்களில் மிகவும் சிரமப்பட்டு வேலையில் இவரை அமர்த்தினேன், அங்கெல்லாம் சில நாட்களுக்குமேல் இவர் நின்று வேலைசெய்வதில்லை. அவரைப் பலமுறை கண்டித்து அறிவுரைகள் சொல்லியும் அவர் தனது பழக்கத்தை மாற்றிக்கொள்ளவில்லை. சம்பவதினத்தன்று காலையில் தேநீர் குடிக்கும் பொழுது தங்கையைப் பார்த்து, வீணைப் பொழுது போக்கிக்கொண்டிருப்பது சரிவராது. இன்றையிலிருந்து நீர் எங்கேயாவது வேலைக்குப் போகவேண்டும் கூலிவேலைக்கென்றாலும் போகத்தான் வேண்டுமெனக் கூறிவிட்டு வேலைக்குச் சென்றுவிட்டேன் வேலைத்தலத்திற்கு என்னைத் தேடிவந்த எனது நண்பன், 'தங்கை மருந்து குடித்துவிட்டார். அஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்விட்டார்கள்' எனத் தெரிவித்தார். அஸ்பத்திரியில்போய்ப்பார்த்தபொழுது அவர் இறந்துவிட்டார்''

இவ்வாறு வைரவப்புளியங்குளத்தைச் சேர்ந்த ஆறுமுகம் தியாகராசா என்பவர் அவரது தங்கை ஆறுமுகம் விஜயகுமாரியின் மரணவிசாரணையில் தெரிவித்தார்.

விசாரணைகளை நடத்திய வவுனியா மரணவிசாரணை அதிகாரியும் சமாதானநீதவானுமான டாக்டர் கே பாலசிங்கம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## மாஸ்டர் நினைவாக பாடசாலை மதில்

(அனலைதீவு)

அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலய நூறுவது ஆண்டு நிறைவை சிறப்பாகக்கொண்டாட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

இதனையொட்டி இப்பாடசாலையில் முப்பத்தியேழு வருடங்கள் தொடர்ச்சியாக சிரேஷ்ட உதவி ஆசிரியராகவும், உபஅதிபராகவும்கடமையாற்றி அண்மையில் அமரத்துவமடைந்த ச. கணபதிப்பிள்ளையின் நினைவாக பத்தாயிரம் ரூபா செலவில் மதில் சுவர் கட்டப்படவிருக்கிறது.

இதேபாடசாலையில் பதினெறு வருடங்கள் ஆசிரியப் பணிபுரிந்த அமரர் கணபதிப்பிள்ளையின் பாரியார் திருமதி சியாமளவல்லி கணபதிப்பிள்ளையும் மக்களும் இதற்கான செலவைப் பொறுப்பேற்றுள்ளனர்.

இதற்கான அடிக்கல்நாட்டு வைபவம் வருகிற முதலாம் திகதி நடைபெறவுள்ளது. அன்றையதினம் அமரர் கணபதிப்பிள்ளை ஆசிரியரின் அந்தியேட்டி தினமாகும்.

அனலைதீவு அரசினர் ஆஸ்பத்திரி உதவி வைத்திய அதிகாரி திரு. விசுவேசுவர ஐயர் அத்திவாரக் கல்லை நாட்டி வைப்பார்.

## பளை கொலை முயற்சி வழக்கு:

# ''துப்பாக்கியை ஏந்தியபடி எதிரி 'ஹேன்ஸ்அப்' என்றார்

(மட்டுவில்)

'இரவு சாப்பாடு முடித்து சுருட்டைப் பற்றவைத்துக்கொண்டு அடுத்த வீட்டிற்குச் சென்று திரும்பியநான் என் பிள்ளைகளுடன் கதைத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது திடீரென்று முற்றத்தில் ஒரு வெடிச்சத்தம் கேட்டது. நான் திடுக்கிட்டு வெளியே வந்தேன். அப்பொழுது முதலாம் எதிரி சினிமாப்பாணியில் துப்பாக்கியைப் பிடித்தபடி ''ஹேன்ஸ் அப்'' என்று கூறியபடி என்னைநோக்கி வந்தார்''.

இவ்வாறு பளை. கொலை முயற்சி வழக்கில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. வி. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் முருகேசு அழகராஜாசாட்சியமளிக்கையில் கூறினர்

கடந்தமேமாதம் 2-ந் திகதி பளைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த வண்ணான்கேணிஎன்ற இடத்தில் வசித்துவந்த முருகேசு அழகராஜா என்பவரை அதே ஊரைச் சேர்ந்த சின்னத்தம்பி அமிர்தலிங்கம், சின்னத்தம்பி தணிகாசலம், முருகேசு தவராஜா அல்லது துரை, மைலன் செல்லத்துரை என்ற நால்வரும் இரவில் வீட்டினுள் அத்துமீறிப் புகுந்து துப்பாக்கியைக் காட்டி மிரட்டியும், மீன் வெட்டும் வாளால்பலதடவை தலையிலும் காலிலும் வெட்டியும் பலத்த காயங்களை உண்டுபண்ணி கொலை செய்ய எத்தனித்ததாகவும் பளைப் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு. வி. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது சாட்சி தொடர்ந்து கூறியதாவது:

''சம்பவ தினம் நான் பிள்ளைகளுடன் பேசிக் கொண்டிருந்தேன். எனது மனைவி விறுந்தையிலுள்ள கட்டிலில் உட்கார்ந்திருந்தார். விளக்கு எரிந்துகொண்டிருந்தது எனது தாயாரும் அங்கிருந்தார். சிறிது நேரத்தில் எனது வீட்டு முற்றத்தில் ஒரு வெடிச்சத்தம் கேட்டது. நான் திடுக்கிட்டுவிட்டேன். வெளியே வருவதற்குள் முதலாம் எதிரி துப்பாக்கியை நீட்டியபடி என்னை நோக்கி வந்துகொண்டிருந்தார். அவரை நான் விழித்துப்பார்த்தேன், அவர் என்னை நோக்கி வந்தபடி 'ஹான்ஸ் அப்' என்று சத்தினர் நான் ஒரு நொடிக்குள் பாய்ந்து துப்பாக்கிக்குழலின் அடிப்பாகத்திலும் நுனிப்பாகத்திலும் பிடித்துக்கொண்டேன்.

இப்படி நாம் இழுபறிப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது, 2-ம் எதிரி எங்கள் இருவருக்குமிடையில்; கைகளுக்குக் கீழால் புகுந்து மறு பக்கத்திற்கு வந்து, தன் கையில் இருந்த மீன் வெட்டும் வாளால் என் தலையில் பலமுறை தாக்கினர். 3-ம் எதிரியும் கையில் ஒரு மீன் வெட்டும் வாள் வைத்திருந்தார். அவரும் என் தலையில் தாக்கினர் இப்படியே இழுபட்டு வெளியே வந்து விட்டோம். இருந்தும் துப்பாக்கியை இருவருமே விடவில்லை. அப்பொழுது 2-ம் எதிரி மீண்டும் என் தலையில் பலமாகத் தாக்கினர். நான் மயங்கி விழுந்து விட்டேன். பின்னர் நடந்தது தெரியாது.

''நான் 1-ம் எதிரி செய்த குற்றம் ஒன்று சம்பந்தமாகப் பொலிசாரிடம்தகவல் கொடுத்திருந்தேன். இதன் காரணமாகவே எதிரி என் மீது பகைமை சாதித்தார். நான் எதிரிகளை, வீட்டில் எரிந்த விளக்கு வெளிச்சத்திலும் குரலிலுமிருந்து அடையாளம் கண்டேன் என்றார்.

பளைப் பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. எஸ். கந்தையா வழக்கை நடத்தினர். எதிரிகள் தரப்பில் சட்டத்தரணி திரு. செ. அம்பிகைபாலன், சட்டத்தரணி திருமதி அ. நிமலினியின் அனுசரணையுடன் ஆஜரானர். மேல் விசாரணை டிசம்பர் 1-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.


# வல்லதே வாழும்!


வல்லவன் வாழ்வான் என்பது பழமொழி. பயிர் பச்சை, செடி, கொடிகளிலும் அப்படித்தான், வல்லதே வாழும், பசளை; உரங்கள் பயிர்களைச் செழிக்கச் செய்தாலும், தேவையற்ற களைகள், புதர்ச் செடிகளும் அவற்றின் சாரத்தை உறிஞ்சி எடுத்துக் கொள்ளும். சிறப்பான களைக் கட்டுப்பாடு இதனால் தான் அவசியமாகிறது. விளைச்சலைக் கூட்டி இலாபத்தை பெருக்க, இது மிக முக்கியம்.

# ஹெடோனல் எம் 60%

60% எம். சி. பீ ஏ. ஏமின் உப்புகள் கொண்டது.
அகன்ற இலைக் களைகளையும் புதர்ச் செடிகளையும் அது அறவே அழிக்கும்.

ஹெடோனல் எம் 60% நெற்பயிரைப் பாதிக்கும் அகன்ற இலைக் களைகள், புதர்ச் செடிகளை, மிகச் சிறப்பாகவும் சிக்கனமாகவும் கட்டுப்படுத்தும் தரமான களைநாசினி. அது உங்கள் நெற் பயிரைப் பாதுகாப்புடன் இலாபத்தையும் பெருக்குவது நிச்சயம்.






BAYER

இலங்கையில் பாயர் பீடைநாசினிகளைத் தயாரிப்போர் :

ஹேக்கெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.
தொலைபேசி : 93563, 96331-6

| | |
|---|---|
| 100 மில்லி லீட்டர் ரூபா 10/- | 200 மில்லி லீட்டர் ரூபா 17 50 |
| 450 மில்லி லீட்டர் ரூபா 36 50- | 2 லீட்டர்கள் ரூபா 145/- |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெ ஸ் லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
சிவாஜி — பத்மினி
மரகதம்

ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 10.30 m 4-45,
7-15, & 9-45 p. m.
CARRY ON BEHIND
(Color)

வசூலில் பெரும் சாதனை! 5-வது வெற்றி வாரம்!
இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா—அசோகன்
மற்றும் பலர் நடித்த
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
நினைவில் நின்றவள்

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
நாகேஷ் - சௌகார்ஜானகி
நீர்க்குமிழி

75-வது நாளை நோக்கி வெற்றிநடை போடுகிறது
ராணி - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
சட்டம் என் கையில்
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின் இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
பி எஸ் வீரப்பா-நம்பியார் நடித்த
மீனவ நண்பன்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
KARATE CALLEN
எதிர்பாருங்கள்
ஒரேவானம் ஒரேபூமி

சாந்தி
யாழ்நகர்-10-30, 2:30, 6-30, 9-45
வெற்றி...! வெற்றி...!!
மாபெரும் வெற்றி...!!!
நீயா?
100 நாட்களில் வசூலில் 7 லட்சத்திற்குமேல்!
வெள்ளிவிழா வணனசசித்திரம்
ரசிகர்கள்காட்டும் பேராதரவு காரணமாக
தீபாவளி தினம் வரவிருந்தாகவும் காட்சியளிக்கும்
'கடைசிவாரம்'

WINDSOR RELEASE FROM 31-10-1980
JAFFNA DAILY 5 SHOWS
Daily at 10-30 A.M., 2.00, 4-3', 7 00&9-30P.M. only
A loving and devoted wife pays heavily to release her husband wrongfully convicted for a crime, he never committed. He serves a jail sentence for 28 years in a Mexican prison, framed by his own grandfather. You must see the film to realise the impact on you.
CHARLES BRONSON ROBERT DUVALL
JILL IRELAND
in
"BREAK OUT"
Jailed for a crime he never committed. Only Charles Bronson can get him out!
Adults. Color Action.


## உடுப்பிட்டிக்கு மரணவிசாரணை அதிகாரி

(நெல்லியடி)

உடுப்பிட்டிப் பகுதிக்கு புதிய மரணவிசாரணை அதிகாரியொருவர் நியமிக்கப்படவுள்ளார். இதற்கான விண்ணப்பங்கள் யாழ். அரசாங்க அதிபரினால் கோரப்பட்டுள்ளது. இச்சடுதி மரண விசாரணை அதிகாரி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ள நவம்பர் மாதம் 23 ம திகதி வரை கால அவகாசமளிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஒரேயொரு மரணவிசாரணை அதிகாரியே வடமராட்சி முழுவதிலும் மரணவிசாரணை மேற்கொண்டு வந்தார். (அ

## யாழ். சுகாதார விழா: ஞாயிற்றுக்கிழமை

பிரதம விருந்தினர்: எதிர்க்கட்சி முதலவர் அ. அமிர்தலிங்கம் பா. உ.

பி. ப. 6-00—பி. ப. 7-00 மங்கள இசை. பி. ப. 7-00—பி. ப. 7-15 நடனம் (சுகாதார விழாவில் பரிசு பெற்றது). பி.ப.7-15—பி.ப. 7-30 நாடகம் (சுகாதார விழாவில் பரிசு பெற்றது.) பி.ப. 7-30—பி. ப. 8-15 இலங்கை ஆணழகன் கலந்துகொள்ளும் நிகழ்ச்சி, ஆணழகன், அழகுராணி போட்டிநிகழ்ச்சி. பி.ப.8-15—பி. ப. 9-00 திருமதி லீலா ஆறுமுகையாவின் சதங்கை நர்த்தனாலய மாணவ மாணவிகள் அளிக்கும் நாட்டிய நிகழ்ச்சி. பி. ப. 9-00—பி. ப. 9-30 தலைமையுரை, முதல்வர் உரை, பிரதம விருந்தினர் உரை, நன்றியுரை, பரிசளிப்பு, பி. ப. 9-30 — பி. ப. 10-30 திரைப்பட இசையமைப்பாளர் கண்ணணின் 'சங்கமம்' இசையமுதம்.

## பொதுசனத் தொடர்பு பற்றிய வகுப்பு

(நெல்லியடி)

வடபிராந்திய போக்குவரத்துச்சபை, இ. போ. ச. சாரதிகளுக்கும், காப்பாளர்களுக்கும் பொதுசனத் தொடர்புகள்பற்றிய பயிற்சி வகுப்புகளை நடாத்தவுள்ளது.

பிரதிமாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில், யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் இப்பயிற்சிவகுப்புகள் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ

## ஐந்து கட்சிகள் கூடி ஆராயும்

(யாழ்ப்பாணம்)

ஐந்து கட்சிகள் கூட்டமைப்பில் வடபிரதேச நடவடிக்கைக்குழுக்கூட்டம்நாளைமாலை தமிழர்விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி (சண்-தலைமை), ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளின் வட பிரதேசப் பிரதிநிதிகளுக்குகூட்டத்திற்கான அழைப்பிதழ்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வேலைநிறுத்தத்தில் வேலை இழந்தோர் பிரச்னை, வாழ்க்கைச்செலவு உயர்வு, அத்தியாவசியச் சேவைச் சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம், சிறிமாவின் குடியியல் உரிமை பறிப்பு ஆகியவற்றை முன்வைத்து நவம்பர் மாதம் 22 ம் திகதி நடாத்தப்படவிருக்கும் கூட்டம் சம்பந்தமாக இக்கூட்டத்தில் ஆராயப்படுமெனத் தெரிகிறது.


நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 4 pm, 7.00 & 9-30 m
Seven Ups
(adults only)


## உதைபந்தாட்டப் போட்டிகள்:

# நடேஸ்வராக் கல்லூரி வெற்றியீட்டியது

(காங்கேசன்துறை)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தால் கல்லூரிகளுக்கிடையே நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் முதலாம் பிரிவில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை 3-1 கோல்களால் வெற்றியீட்டியது.

சுழிபுரம் விக்டோரியாக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டி ஆரம்பம் முதல்- இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. இடைவேளையின்போது இரு கோஷ்டியினரும் தலா ஒரு கோல் போட்டிருந்தனர். இடைவேளையின் பின்னர் நடேஸ்வராக் கல்லூரிக்கோஷ்டியினர் திறமையாக விளையாடி அடுத்தடுத்து இரு கோல்களைப்போட்டுஇறுதியில் 3-1 கோல்களால் வெற்றியீட்டினர். நடேஸ்வராக் கல்லூரிக் கோஷ்டியினர் மேலும் பல கோல்கள் அடிக்க சந்தர்ப்பம் கிடைத்தபொதிலும் முன்னணி வீரர்களின் திறமையின்மையினால் அவற்றை சரியான முறையில் பயன்படுத்தவில்லை.

நடேஸ்வராக் கல்லூரி 1-ம் பிரிவினர் கலந்துகொண்ட சிநேகபூர்வமான போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை 0-1 கோல்களால் வென்றனர். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. க. தனபாலசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலயத்திற்கும் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக்கும் இடையே காங்கேசன்துறைப் பட்டினசபை மைதானத்தில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்க ஆதரவில் நடைபெற்ற 2-ம் பிரிவுப் போட்டியில் 4-1 கோல்களாலும், 3-ம் பிரிவுப்போட்டியில் 6-1 கோல்களாலும் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி வெற்றியீட்டியது:

கல்லூரிகளுக்கிடையேயான

# அ.இ. விஞ்ஞான அறிவுப்போட்டியில் பரி யோவான் சாம்பியன்

(அரியாலை)

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியில் கல்லூரிகளுக்கிடையே நடாத்தப்பட்ட விஞ்ஞான அறிவுப் போட்டியின் இறுதிப் போட்டியில் யாழ். பரி. யோவான் கல்லூரிக் குழுவினர் யாழ். இந்துக் கல்லூரிக் குழுவினரை 5: 4 புள்ளிகளால் தோற்கடித்து 1980-ம் ஆண்டிற்கான தமிழ் மொழி மூலம் விஞ்ஞான அறிவுப் போட்டியில் சாம்பியன் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச்சங்கத்தினால் மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட போட்டிகளில் 8 கல்லூரிகள் முதலில் தெரிவு செய்யப்பட்டன.

கொழும்பு பல்கலைக் கழக மண்டபத்தில் நடைபெற்ற மாவட்டங்களுக் கிடையிலான கால் இறுதிப் போட்டியில் யாழ். பரி, யோவான் கல்லூரி மட்டக்களப்பு மைக்கேல்ஸ் கல்லூரியை 8: 2 புள்ளிகளால் தோற்கடித்தது. யாழ் இந்துக் கல்லூரி வெலிகம மகா வித்தியாலயத்தை 6: 5 புள்ளிகளால் தோற்கடித்தது கொழும்பு றோயல் கல்லூரி திருக்கோணமலை சென்ற் ஜோசப் கல்லூரியை 8 : 4 புள்ளிகளால் தோற்கடித்தது அக்கரைப்பற்று மத்திய கல்லூரி அக்குரஸ்ஸ மகாவித்யாலயத்தை 11 : 8 புள்ளிகளால் தோற்கடித்தது.

அரை இறுதிப் போட்டி மிகவும் விறுவிறுப்பாக ஆரம்பமாகியது. இப்போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி அக்கரைப்பற்று மத்திய கல்லூரியை 12 : 5 புள்ளிகளால் தோற்கடித்தது. யாழ். பரி. யோவான் கல்லூரி கொழும்பு றோயல் கல்லூரியை 10 : 1 புள்ளிகளால் தோற்கடித்தது.

இறுதிப் போட்டியில் கலந்து கொண்ட யாழ். பரி.யோவான் கல்லூரி தன்னுடன் போட்டியிட்ட யாழ். இந்துக் கல்லூரியை 5 : 4 புள்ளிகளால் தோற்கடித்து 1980-ம் ஆண்டுக்குரிய சாம்பியன் கோஷ்டியாகத் தெரிவுசெய்யப்பட்டது. அரை இறுதிப் போட்டியும். இறுதிப் போட்டியும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

டிசம்பர் மாதம் 12-ம் திகதி நடைபெறவிருக்கும் விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்த விழாவில் யாழ். சம்பியன் பரியோவான் கல்லூரிக்கான விருது வழங்கப்படவிருக்கிறது.

சம்பியன் குழுவாகத் தெரிவு செய்யப்பட்ட யாழ் பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டியின் தலைவனா செல்வன் ஆ. இராமநாதனும், ஏனைய உறுப்பினர்களாக செல்வன்கள் பா. லோகன், கனகரத்தினம், சு. சிறிஹரிநேசன், பி. வ, விசுவலிங்கல், பூ. உருத்திரன் ஆகியோர் அங்கம்வகித்தனர்.

# பத்திரிகை எழுத்தாளர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கலை, இலக்கிய நண்பர்கள் ஒன்றியத்தின் பத்திரிகை எழுத்தாளர்களுக்கான கருத்தரங்கு அடுத்த மாதம் 21-ந் திகதி மாலை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ்ப்பாண மாவட்ட அமைச்சின் நிர்வாக அதிகாரிகள், சமயத் தலைவர்கள், கல்லூரி அதிபர்கள், பொதுப்பிரமுகர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், உட்படப் பலர் உரையாற்றுவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் பாடசாலை சஞ்சிகைகளின் ஆசிரியர்கள் அழைக்கப்படுவர்.

# இப்பகுதிகளுக்கு மின் விஸ்தரிப்பு

(நெல்லியடி)

உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள கம்பர்மலை, ஊரிக்காடு பகுதிகளில் மின் விஸ்தரிப்பு வேலைகள் இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுமார் இரண்டு லட்ச ரூபா செலவில் உடுப்பிட்டியிலிருந்து இம்மின் விஸ்தரிப்பு வேலைகள் நடைபெறுகின்றன. உடுப்பிட்டிப்பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கம் இதற்கான நிதியினை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்திருந்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

# தேவாலயம் சென்றமகள் வீடு திரும்பவில்லையாம்

## தந்தை பொலிசில் புகார்

(பண்டத்தரிப்பு)

தேவாலயத்திற்கு ஞாயிறு பூசைக்குச் சென்ற 18 வயது யுவதி ஒருவர் வீடு திரும்ப வில்லை என்று யுவதியின் தந்தை ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தமது மகளான ஜெயச்சந்திரவதனி கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மானிப்பாய் அந்தோனியார் கோவில் பூசைக்கு சென்று வருவதாக வீட்டாரிடம் கூறிவிட்டு சென்றவர் இதுவரை வீடு திரும்ப வில்லை என்றும் இவரைத் தேடிக் கண்டுபிடித்து தருமாறும் யுவதியின் தந்தையான செபமாலை தமது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளார். ஆனைக்கோட்டைப் பொலிசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

# மினிபஸ்ஸைகுடிபோதையில் செலுத்திஞராம்

(பண்டத்தரிப்பு)

குடிபோதையில்மினிபஸ்ஸை செலுத்திய சாரதி ஒருவர் ஆனைக்கோட்டைப் பொலிசாரினுல் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஆறுகால் மடத்தடியில் மேற்படி மினி பஸ் வண்டியை செலுத்திய அற்புதராசா என்னும் இச்சாரதி முன்னுல் சென்ற பிரமுகர் ஒருவரின் வாகனத்தின்மீது மினிபஸ்ஸை மோதவிட்டாராம். இதுபற்றி ஆனைக்கோட்டைப் பொலிசில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து சார்ஜன்ட் திரு. தில்லன்துரை மேற்படி மினிபஸ் சாரதியை கைதுசெய்துள்ளார். இவர் மது போதையில் மினிபஸ் வண்டியை செலுத்தியதாக பொலிசார் தெரிவித்தனர்.

## சார்ஜன் சுடப்பட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுரம்பதி மேலும் கூறியதாவது: இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் நான் யாழ். பாதுகாப்பு இணைப்புப் பிரிவில் கடமையாற்றினேன். அன்று கடமையாற்றிய பொலிஸார் சிலர் ஐ. எஸ். பி. பிரிவில் இருந்து வந்திருந்தனர்.

"அந்த நேரத்தில் அங்கு நான்தான் சிரேஷ்ட உத்தியோகத்தர். நான் இராணுவத்திலுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர்களுடன் மேல் மாடியில் இருந்தேன். எனக்கு முன் சாட்சியமளித்த காப்டன் மெண்டிசும் அங்கு இருந்தார்.

2-8-80 சாயந்தரம் நான் படம் பார்க்க சென்றிருந்தேன்.. காப்டன் மெண்டிசும் மற்றும் 2 பொலிஸ் உத்தியோகத்தர்களும் வந்திருந்தனர். ஸ்ரீதர் தியேட்டரில் படம் பார்த்தோம். இரவு 10 மணிக்கு படம் பார்த்துவிட்டு முகாமுக்கு திரும்பினேம். பொலிஸ் உத்தியோகத்தர்களை, அவர்களது வசிப்பிடத்தில் இறக்கிவிட்டோம். பின்பு முகாமிற்கு சென்றேம்.

"நாங்கள் காரைவிட்டு இறங்கும்போது தயானந்த டண்டார, ரத்னுயக்கா ஆகியோர் வந்து கப்டன் மெண்டிசிடம் ஹெட்டி ஆராய்ச்சியும், உப்புலும் இன்னும் வரவில்லை என்றனர். மதியானம் இருவரும் சென்றதாகவும் சொன்ஞர்கள். அப்போது காப்டன் மெண்டிஸ், சார்ஜன் பிரேமச்சந்திரனை கூப்பிட்டு இருவரையும் தேடிப் பார்க்கும்படியும், அவர்கள் நடமாட்டம் பற்றி விசாரிக்கும்படியும் தெரிவித்தார்.

"அதன்பின்பு நானும் காப்டன் மெண்டிசும், இராப் போசனத்திற்காக மேல்மாடிக்குச் சென்றேம். 2 சிப்பாய்களும் நீண்டநேரம் காணப்படாததினுல் அதைப்பற்றி காப்டன் மெண்டிஸ் அக்கறைப்பட்டுக் கொண்டிருந்ததை அவதானித்தேன்.

யாழ்ப்பாணம் பொலிசாருக்கும், குருநகர் பொலிசுக்கும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டேன். சிப்பாய்கள் எவரும், ஏதாவது சம்பவத்தில் சம்பந்தப்பட்டுள்ளனரா என்று விசாரித்தேன், அப்படி ஒரு சம்பவம் நடந்ததாகத் தெரியவில்லை எனப் பொலிசார் கூறிஞர்கள். நானும் காப்டன் மெண்டிசும் இரவு போசனம் அருந்தினேம். மேல்மாடியில்சென்று போசன அறையில் நாங்கள் இருவரும் போசனம் அருந்திக்கொண்டிருந்த போதும், காணுமல் போன சிப்பாய்கள் பற்றி பேசிக்கொண்டிருந்தோம். நான் காப்டன் மெண்டிசுக்கு ஆயுதங்களைப் பரிசோதனை செய்து பார்க்குமாறு ஆலோசனை கூறினேன், நான் நித்திரைக்குச் செல்லும் போது, தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது.

"யாழ். உப-பொலிஸ் பரிசோதகர் திரு. தம்பாப்பிள்ளையிடமிருந்து அந்த அழைப்பு வந்தது. சார்ஜன் ஒருவர் சுடப்பட்டுள்ளதாகவும், சந்தேக நபர்கள், சுன்ஞகம் பக்கம் செல்வதாகவும் தெரிவித்தார்.. பிரதிப் பொலிஸ் மாஅதிபர் இராணுவத்தினரை உடனடியாக உஷார் நிலையிலிருக்கும்படி கேட்டுக்கொண்டதாகவும் சொன்ஞர். இதனை நான் காப்டன் மெண்டிசுக்கு சத்தம் போட்டுச் சொன்னேன் அந்த நேரம் காப்டன் மெண்டிஸ் சிப்பாய்கள் தங்குமிடத்தில் நின்ருர். அவர் அப்போது கவலைப்பட வேண்டாம் ஏதோ நடந்துவிட்டது என்ருர்."

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (சு)

மக்கினென் டிறவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்.
MACKINNON TRAVEL SERVICE (Ceylon) LTD
தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்தில் திறுவி இயங்கி வருகிறது.
இங்கு ஃ உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
ஃ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
சுற்றுலாக்கள் ஃ பாஸ்போர்ட்
இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லாமலே ஒழுங்கு செய்து கொள்ளலாம்; உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.
மக்கினென் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92. தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது.

## புதிய வங்கிக் கிளைகள்

(உடுப்பிட்டி)

யாழ். மாவட்டத்தில் அடுத்த வருடம் ஐந்து மக்கள் வங்கிக் கிளைகள் புதிதாகத் திறந்து வைக்கப்படவுள்ளன.

வேலணை, பண்டத்தரிப்பு, காரைநகர், கொக்குவில், பூநகரி ஆகிய இடங்களிலேயே இம் மக்கள் வங்கிக் கிளைகள் திறந்து வைக்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை வட பிராந்திய மக்கள் வங்கி முகாமையாளர் திரு. இ. நடராசா மேற்கொண்டு வருகின்ருர்.

பத்தாம் வகுப்பு - தமிழ்மொழி
இரண்டாம் பகுதிக்கான
20
கட்டுரைப் பூந்துணர்
ஆசிரியர்: வித்துவான்
க. சொக்கலிங்கம் M.A. (Cey.)
விலை 8-25
காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

### வவனியாவில் நேற்று அதிகாலை

# பஸ், லொறியை மறித்து கொள்ளையர் கைவரிசை!

## லொறிச்சாரதிக்கு கத்திக்குத்து

(வவ்னியா)

வவனியா —. ஹொரவபத்தானை வீதியில் நேற்று அதிகாலை யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை சென்ற தனியார் லொறியொன்றின் சாரதியிடமிருந்து 1,000 ரூபா ரொக்கப் பணமும், 10,000 ரூபாவிற்கான காசோலையொன்றும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

லொறிச்சாரதியை கொள்ளையர்கள் கல்லால் எறிந்தும் கத்தியால் குத்தியும் காயம் படுத்தியுள்ளனர்.

இதன்பின்னர் லொறிச்சாரதி லொறியை ஹெப்பிட்டிகொல வரை செலுத்திச் சென்று அங்கிருந்து இரு பொலிசாருடன் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குத் திரும்பி வந்து பார்த்தபோது அங்கிருந்து கொள்ளையர்கள் மறைந்து விட்டார்கள். அதன் பின்னர் சாரதி இதுபற்றி வவனியா பொலிஸ் நிலையத்தில் புகார் செய்தார்.

### மற்றுமொரு சம்பவம்

இதேவேளை இவ்வீதியால்திருகோணமலைக்குச் சென்ற பஸ்ஸில் பயணம் செய்த பிரயாணிகளிடமிருந்தும் கண்டக்டரிடமிருந்தும் சுமார்3,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டதுடன் பிரயாணிகளின் கைக்கடிகாரங்களும் உடுப்புப் பெட்டிகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கொள்ளையர்கள் லொறியையும் பஸ்ஸையும் மரக்குத்திகளைப் போட்டு வழிமறித்தே இக்கொள்ளைகளை நடத்தியுள்ளனர்.

இக்கொள்ளைகள் தொடர்பாக வவனியா பொலிஸ் அதிபர் திரு ஜெயசூரியாவும், வவனியா தலைமைப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு ஆரியதிலகாவும் தீவிரபுலன் விசாரணை நடத்திவருகின்றனர். (வே)

## இரு நாடுகளும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈரானிய பீரங்கிப் படைகள் விரட்டி அடித்துள்ளன என்றும் ஈரான் தெரிவித்துள்ளது.

### ஈரான் 'ராக்கெட்' தளங்கள் சேதம்

இதேவேளையில் அபடானுக்குத் தெற்கே பல்வேறு ஈரானிய 'ராக்கெட்' தளங்களை தமது விமானங்கள் இன்று அதிகாலை தாக்கிச் சேதப்படுத்தின என்று ஈராக் தெரிவித்துள்ளது.

## அலங்கார நீர்த்தொட்டி

(யாழ்ப்பாணம்)

சுகாதாரவாரத்தையொட்டி யாழ் பஸ் நிலையத்திற்கு எதிரில் 'விமாகி' ஸ்தாபனத்தினரால் நிறுவப்பட்ட அலங்கார நீர்த்தொட்டியை நேற்றுமுன்தினம் மாலை யாழ் முதல்வர் திரு. இராசா விஸ்வநாதன் மின்விளக்கேற்றி திறந்து வைத்தார்.

இவ்விழாவில் யாழ் எம். பி. திரு. வி. யோகேஸ்வரன் உதவி முதல்வர் திரு. சேவியர் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் சுகாதாரபகுதி ஊழியர் கலந்துகொண்டனர்.

அலங்கார நீர்த்தொட்டியை மக்கள் பார்வையிட்டனர் (கொ)

## ரயில் - லொறி விபத்து

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் ரயில் நிலையத்துக்கருகில் உள்ள கடவையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட ரயில் - லொறி விபத்தில் லொறி சுக்குநூருகியது. லொறிச் சாரதி படுகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(இ)

## கிருஷ்ணமூர்த்தி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாவும் சென்றிருந்தார்.

பிரம்ம ஞான சங்கத்தில் இவருடன் சேர்ந்து பணியாற்றிந்த இவரின் சகோதரர் நித்தியானந்தா 1925ம் ஆண்டு மறைந்தமை கிருஷ்ணமூர்த்தியின் மெய்ஞ்ஞானப் பணிக்கு இழப்பாக அமைந்தது.

திரு. கிருஷ்ணமூர்த்தி இலங்கை வரும்போது அரசாங்கத்தின் சார்பில் ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் அவரை வரவேற்பார்.

அடுத்தமாதம் 8ம், 15ம், 16ம் திகதிகளில் கொழும்பு நவரங்கஹல மண்டபத்தில் இவர் சொற்பொழிவாற்றுவார். (வெ)

### நாளை வாஞெலியில்

## குறிஞ்சிக்குமரன் தலபுராணம்

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவை ஒன்றில் 'ஞான விளக்கு கலாச்சார சுடர்' என்ற சமய நிகழ்ச்சியில் நாளை சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு பேராதனை பல்கலைக்கழகத்திலுள்ள குறிஞ்சிக் குமரன் பேரில் பாடிய பாடல்கள் உரையுடன் ஒலிபரப்பாகும்.

பண்டிதர் க. வீரசத்தி பாடிய இப்பாடல் நிகழ்ச்சியை திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் தொகுத்தளிக்கிருர்.

கடந்தவாரம் இந்நிகழ்ச்சியில் அருட்கவி சி விநாசித்தம்பி, பாடிய தொண்டைமாஞறு செல்வச்சந்நிதி தலபுராணம் ஒலிபரப்பப்பட்டது. (கு)

## யாருடையது?

யாழ்ப்பாணம் எஸ் சின்னத்துரை அன் பிறதர்சில் தவறவிடப்பட்ட பெண்கள் மூக்குக் கண்ணுடி ஒன்று 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ளலாம்.

## நெடுங்கேணியில் நடமாடும் செயலகம்

(புளியங்குளம்)

வவனியா வடக்கு நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பணிமனையில் அடுத்தமாதம் முதல் நடமாடும் கச்சேரி செயல்படவுள்ளது. மாதந்தோறும் இரண்டாவது திங்கட்கிழமைகளில் நடமாடும் கச்சேரி செயல்படும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ... மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது 31-ம் திகதி Registered as a newspaper in Sri Lanka under No GS 8948/78 The Eelanaadu P. B. No 49
Telegrams Eelanaadu, Phone 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org